விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பன்னிரெண்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை (05.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 17

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## 4ம் சுற்றுப் பேச்சு தாய்லாந்தில்

# அரசு-புலிகள் முரண்பாட்டிற்கு நாளை இணக்கம் காணப்படும்!

### தாய்லாந்து செல்ல முன் அமைச்சர் மிலிந்த பேட்டி

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு குறித்து நாளை தாய்லாந்தில் நடைபெறும் பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்படும் என்று அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று தாய்லாந்திற்குப் பயணமாவதற்கு முன்னதாகத் தெரிவித்தார்.**

அரசுககும் விடுதலைப்புலிகளுக் குமிடையே நாளை திங்கட்கிழமை தாய்லாந்தில் நடைபெறவுள்ள நான் காம் சுற்றுப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து செல் வுதற்கு முன்னர் அமைச்சர் மிலிந்த மொறகொட செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவக்கையில்,தற்போது அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக குடியமர்த்துவது தொடர்பாக அரசுக் கும் புலிகளுக்குமிடையே எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் முக்கிய விட யமாக பேச்சுவார்த்தையில் ஆராயப் பட்டு இணக்கம் காணப்படவுள்ளது.

நாளை நடைபெறும் சமாதானப்

(12ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிப்பிரதிநிதிகள் நேற்று தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

தாய்லாந்தில் நாளை ஆரம்பமாக விருக்கும் அரசு-விடுதலைப் புலி களுக்கிடையேயான நான்காம் சுற்று சமாதானப் பேச்சில் பங்குபற்றும் அரச,விடுதலைப் புலிகளின் பிரதிநி திகள் நேற்று தாய்லாந்து பயணமா கினர்.

அமைச்சர் மிலிந்த மொறகொட வும்,விடுதலைப் புலிகளின் பிரதிநிதி கள் குழுவினரும் நேற்றுக் காலை கட்டுநாயக்காவில் இருந்து தாய் லாந்து பயணமாகினர்.

அமைசசர் பேராசிரியர் ஜீஎல்பீரிஸ் நேற்று இரவு பயணமானார்.அமைச் சர் ஹக்கீம்,அரச சமாதான செயல கப் பணிப்பாளர் பேணாட்குணதிலக ஆகியோர் இன்று பயணமாகவுள்ள னர்.

(12ம் பக்கம் பார்க்க)

## சீறிவந்த ஈர்க்கு வாணம் குழந்தையின் வயிற்றை பதம் பார்த்தது

(யாழ்ப்பாணம்)

எங்கோஇருந்து சீறிவந்த ஈர்க்கு வாணம், உணவு சாப்பிட்டுக் கொண் டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை யின் வயிற்றைப் பதம் பார்த்தது.

நாவாந்துறைப் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த அருள்நாதன் அனோல்ட் என்ற குழந்தையே வயி ற்றில் காயமடைந்தது.

தாய் குழந்தைக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதேவேளை நேற்றுமுன்தினம் நாவாந்துறைப் பகுதியில் எரிந்தபடி வந்த ஈர்க்கு வாணம் வீட்டு வளவி னுள் நின்ற தென்னைமரம் ஒன்றில் விழுந்ததனால் அது முற்றாக எரிந்து ள்ளது. (த)

## சமாதானப் பேச்சு முறிவடைவதை அரசு ஒரு போதும் அனுமதிக்காது



### வெளிநாட்டு ஊடகத்திற்கு பிரதமர் பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற் சிகளை எந்தச் சக்திகளாலும், குழப்ப முடியாது என பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் அவர் மேலும் கூறுகையில்;

அரசியல் பேச்சுவார்த்தை என் பது மட்டுப்படுத்தப்பட்ட காலத்தினுள முடிவடையக் கூடியவைய்யல்ல.ஜனா பதி சந்திரிகா குமாரதுங்கா கூறுவது போன்றோ ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது போன்றோ நாடு பிளவுபடக்கூடிய வகையில் தீர்வு எதனையும் அரசு முன் வைக்க

(12ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஹக்கீம் கலந்து கொள்ளார்!

### எதிரணித் தலைவரிடம் பிரதமர் உறுதி

(கொழும்பு)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நாளை நடை

பேச்சுவார்த்தையின் போது இது தெரிவிக்கப்பட்டதாகவும், தங்களின் பிரச்சினை தொடர்பாக பிரதமர் ரணில்

## கனடிய தூதுக்குழு தாய்லாந்தில் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்கும்!

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நாளை நடைபெறவுள்ள நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதுவும் ஆராயப்பட மாட்டாது என முஸ்லிம் காங்கிரஸின் எதிரணித் தலைவர் எம்.சுபைர்தீன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் ரணில விக்கிரமசிங்காவுடன் நடைபெற்ற தெரிவிக்கப்பட்டதாகவும், தங்களின் பிரச்சினை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக தாங்கள் திருப்தி அடைந்துள்ளதாகவும் சுபைர்தீன், மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் சமூகத்தின் சார்பில் சுயாதீன முஸ்லிம் தூதுக்குழு ஒன்று நிச்சயமாகக் கலந்து கொள்ளும் என்றும அமைச்சர் ஹக்கீம் அரசாங்க பிரதிநிதியாக மாத்திரமே சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வார் என்றும் பிரதமர் கூறியுள்ளதாகவும் சுபைர்தீன் தெரிவித்துள்ளார்.(ந-5)

# புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்கும்!

## அமைச்சர் ஹக்கீமையும் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

தாய்லாந்தில் நாளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடை பெறும் சமாதானப் பேச்சுவார்ததைகளை அடுத்து, விடுதலைப் புலிகளின் பிரதிநிகளின் குழுவை கனடிய குழுவொன்று சந்தித்து கனடிய சமஷ்டி முறை குறித்து விளக்கமளிக்கவுள்ளது. சமாதான பேச்சுவார்த்தைக்கு வெளியில் நடைபெறவுள்ள இச் சந்திப்பிற்காக கனடாவின் ரொறன்ரோ மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் தலைமையிலான கனடியக் குழுவொன்று தாய்லாந்து சென்றுள்ளது.

இக் குழு தாய்லாந்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான குழுவினரையும் தனித்தனியாகச் சந்தித்து கனடிய சமஷ்டி முறை குறித்து விளக்கமளிக்கும்.

இச் சந்திப்புக் குறித்து இலங்கைக்கான கனடியத் தூதுவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒஸ்லோவில் நடை பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் சமஷ்டித் தீர்விறகுப் புலிகள் சம்ம தம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## சீநோர் இறங்குதுறை திறந்து விடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் இறங்குதுறை நேற்றுமுதல் மீனவர்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக மீனவர்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்த இந்த இறங்குதுறை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவின் பணிப்பின் பேரில் தற்போது திறந்து விடப்பட்டுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று மு.ப 11மணியளவில் தளபதி எம்.சில்வாவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் சீநோர்இறங்குதுறை மீனவர்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டது.

இதேவேளை இறங்கு துறையில் முகாம் அமைத்திருந்த படையினர் 200மீற்றர் தள்ளி தமது முகாம்களை அமைத்துள்ளனர்.

(த-5,6,43)

# இராணுவ புலனாய்வைச் சேர்ந்த தமிழர் ஒருவரைக் காணவில்லை

## புலிகளின் மட்டு. அலுவலகம் இராணுவத்தால் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி டச்பார்க் வீதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவு அலுவலகம் நேற்று முன்தினம் நள்ளிரவு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் புலனாய்வுத் துறையில் பணியாற்றும் எஸ்.புலேநதிரராஜா(வயது40)என்பவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாவே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 7வருடங்களாக இராணுவப் புலனாய்வுத் துறையில் பணியாற்றிய அவர்,நேற்று முன்தினம் மாலை சக இராணுவத்தினர் இருவருடன் சைக்கிளில் டச் பார்க வீதியால் முகாமுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தார்.

அப்போது அறிமுகமான பாணியில் வழிமறித்துக் கதைத்த இளைஞர் ஒருவர் அவரை அழைத்துச் சென்றுள்ளார்.இதனால் சக இராணுவத்தினர் முகாமிற்குத் திரும்பி விட்டனர்.இளைஞரால் அழைத்துச் செல்லப்பட்டவர் முகாமிற்குத் தி[illegible]ாததை அடுத்தே அவர் காணாமல் போனது பற்றித் தகவல் வெளியானது.

இதனையடுத்து புலிகளின் அலுவலகத்தை இரவு 8.45மணியளவில் இராணுவத்தினர் சுற்றிவளைத்து சோதனையிட முற்பட்டனர்.

இதன் போது தமது பிராந்தியத் தளபதிகளின் அனுமதியின்றி இராணுவம்

(12ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் கோரிக்கைக்கு
# பிரதமர் ரணில் பூரண விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புக்கான அனுமதி வழங்கியமை மற்றும் அவற்றுக்குத் தேவையான உபகரண இறக்குமதி என்பன நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே இடம் பெற்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

கடந்த மாத இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இவ் வானொலி ஒலிபரப்பை புலிகள் நடத்துவது தொடர்பாக தமக்கு பூரண விளக்கம் தர வேண்டுமென பிரதமரிடம் கேட்டிருந்தார்

ஜனாதிபதியின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் அனுப்பிவைத்திருக்கும் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அக்கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது;

விடுதலைப் புலிகள் வானொலி நிலையம் ஒன்றை நடத்த கிடைத்துள்ள சந்தர்ப்பம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவக அமையும்

எவ்.எம் வானொலி நிலையம் ஒன்றை நடத்தும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் அனுமதியை பெற்றுள்ளனர் இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மதித்து நடக்கின்றனர் என்பது தெளிவாகிறது

சமாதான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன இக்கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்பு நிலையம் ஒன்று தேவைப்படுவது அவசியமாகும்

அப்போது தான் அவர்களும் தமது கருத்தை இலங்கை முழுவதும் தெளிவுபடுத்த முடியும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

(உ-8)

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு
# புதிய கட்டடம் அமைப்பதற்கு
# அமைச்சர் மகேஸ்வரன் நிதியுதவி
## பணிப்பாளரிடம் நேரில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமை புரியும் மருத்துவ பீட மாணவர்கள் தங்கிப் பயில்வதற்காக ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள காணியில் கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கி தருவதாக இந்து கலாசார அமைச்சர் தி: மகேஸ்வரன் உறுதி அளித்துள்ளார்;

யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்த பின்பே யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகனிடம் மேற்கண்ட உறுதியை வழங்கினார்

இவ் விஜயத்தின் போது யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள யாழ் பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான வெறும் காணியையும் பார்வையிட்ட பின்னரே நிதி உதவி வழங்க உறுதி அளித்தார்

யாழ் போதனா வைத்தியசாலையின் கட்டடங்களுக்கு வர்ணப் பூச்சு பூசுவதற்கும் நோயாளர்களுக்கான 100 கட்டில்களை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

இதேவேளையில் யாழ் குடாநாட்டில் பரவிவரும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு பெரும் தொகையான நோயாளர் போதிய கட்டில்கள் இல்லாமையால் நிலத்தில் தங்கி சிகிச்சை பெற்று வருவதும் யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சேவையாற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது (க-06)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் சைவ த் திரு நெறிக்கழக அறநெறிப்பாடசாலையின் ஆறாம் ஆண்டு நிறைவை ஒட்டி திருவாசக விழாவும், அறநெறிக்களஞ்சியம நூல் வெளியீடும் இன்று பி.ப 2மணிக்கு கழகத்தலைவர் க. தர்மநாயகம் தலைமையில் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது

அறநெறிக் களஞ்சியம் நூலின் முதற் பிரதியை சிவத் தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக் கொள்வார். (த- 5)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு விழாவும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் வைபவமும் இன்று பி.ப 4மணிக்கு அக்கடமி மண்டபத்தில் இயக்குநர் தலைமையில் நடைபெறவுள்ளது-

இந்நிகழ்வுக்கு யாழ் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எம். சிவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார் (ந- 5)

## மீள இயக்கம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன் பள்ளி நாளை திங்கட் கிழமை முதல் தனது சொந்த இடத்தில் மீளவும் இயங்கவுள்ளது. (உ)

## இசைப் பயிலகம்

(யாழ்ப்பாணம்)

இளையோருக்கான இசைப் பயிலகம் நாளை திங்கட்கிழமை மாலை 6 00மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (உ-6)

## பகல்நேர மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

பராமரிப்பு வேலைகள்காரணமாக புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் இன்று காலை 9 00 மணி தொடக்கம் பி.ப 4 00 மணிவரை மின்சாரம்தடைப்பட்டிருக்கும் என பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(உ-3)

## இராசி பலன்

5- 1- 2003
(மார்கழி 21, ஞாயிறு)

திருதியை பி: இ 1. 30வரை
திருவோணம் மாலை 6: 30 வரை
இராகுகாலம் 5. 01- 6. 31
நல்லநேரம் 9- 31 11- 01

**மேடம்**
அதிகாரம், தொழில் முன்னேற்றம், நிலைமாற்றம், முயற்சி கைகூடும்

**இடபம்**
கட்டுப்படுதல், புதிய சிந்தை, பிரயாணம், திடீர் நன்மை

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை, உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், போசன சுகம்

**கடகம்**
காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, நல்லசெய்தி, பொருள் சேர்க்கை

**சிங்கம்**
உடல்நலமடைதல், காரிய நன்மை, மனமகிழ்ச்சி, நல்ல சம்பவம்

**கன்னி**
குடும்பக் கவலை, சிறு வியாதி, முயற்சி தாமதம், தொழில் சிந்தை

**துலாம்**
பெரியோர் சந்திப்பு, உடல் சோர்வு, காரிய தாமதம், சற்பனை மிகுதி

**விருச்சிகம்**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, காரிய அனுகூலம்

**தனுசு**
உஷ்ண வியாதி, கடுமையான வார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், தன விரயம்

**மகரம்**
தெய்வ சிந்தை, போசன சுகம், முயற்சிபலிதம், நண்பர்கள் உதவி,

**கும்பம்**
பிரயாண அலைச்சல், சுப செலவு, சயனசுகக் குறைவு, காரியதாமதம்

**மீனம்**
நிலைமாற்றம், குடும்ப சுகம், நல்லகாரியம், அதிகாரம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## சமாதான விழிப்புணர்வு
## திட்டம் திங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக விழிப்புணர்வுத் திட்டமொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சு மட்டமேற்பார்வையுடன் நாளை திங்கட்கிழமை இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காணி அமைச்சர் ராஜித சேனரட்ண தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள இவ் விழிப்புணர்வுதிட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக ஏனையோர் மட்டத்தில் விஸ்தரிக்கப்படவுள்ளது. (உ-8)

## சித்திரமும் வடிவமைப்பும் கற்கை
# நேர்முகத் தேர்வுக்கு 77 பேர் அழைப்பு

(மானிப்பாய்)

யாழ் பல்கலைக் கழகத்தில் 2003/2004 கல்வி ஆண்டில் சித்திரமும் வடிவமைப்பு கற்கை நெறிக்கு எழுத்துத் தேர்வு மூலம் 77 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 7 ஆம்திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிமுதல் யாழ் பல் கலைக்கழகத்தில் நடை பெறவுள்ளது;

நேர் முகப்பரீட்சை அனுமதிக்கடிதத்தினை நாளை திங்கட் கிழமை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விபரம் வருமாறு;

ஆர்.அபிதா, என்.அகிலன் ரி.அனெற்காலின், எம்.அநுஜன், எ.அருள் கஞ்ஜித், ரி.பாலகுமாரன், எம்.பவானி. பி.பிரவீனா, பி.ஞானேந்திரன், ரி ஜீவன், எஸ்.ஜெகன், ரி.ஜெறிமில்ற்றன், எஸ்.ஜெயகாந், எஸ்.ஜெயசீலன், எஸ். யோகநந்தன், ஜெ.யூடித் சுஜித்தா, ரி. கபஸ், சி. கஜந்தன், ஆர். கஜேந்ரா வி. காகுந்தன், ரி. பிரணவன் என். பிரசாந்தன், பி. பிரசாத், கே. பிரசாத், ஜே. பிரதீபன், ஆர். புஷ்பராஜா, பி. ராகுலன், ரி. ரமேஷ் றெஜினோல்ட், என். ரஞ்சித் குமார், என். செல்வகுமார், எ. சிறிகரன், ரி. சுகந்தன், ஆர். சுகந்தன், பி சுஜீப்குமார் எஸ். சுமன், வி. சுமன்ராஜ், ரி. சுமன், கே. சுரேந்திரன், எஸ். சுரேந்தர்.

பி. திலகா, ரி. திவ்யா, ஜே. தோமஸ் சாம்சன்ரி. துஷ்யநதன், ஆர். உதயராஜ், ரி. வசந்தகுமார், எஸ். வத்சலா, வி. வேணுகோபால், எஸ். விஜயகுமார், எஸ். விஜிதன், ஆர். வினோதினி, ரி. துஷ்யந்தினி, கே. காந்தரூபன், ரி. சக்திவேல், வி. மேரீஸ்ரெலா, எஸ். கமலதீபன், வை. கணேசராசா, டி. கருணாகரன், எஸ். கஸ்தூரி, எஸ். கவிதாஸன், என். கேதீஸ்வரன், ரி. லிங்கேஸ்ரன், ஏ. மயூரன், எஸ். மோகனராஜா, கே. மோகனதாஸ், ரி. மோகன்ராஜ், கே. முகுந்தன், ரி. முருகதாஸன், என். நவநீசன், ரி. நிருஜா, எஸ். நிருபராஜ், கே. நித்தியாகரன், ஏ. பிலிப்ஸ்றோ, கே. தனேஷ்குமார், ரி. தாரிணிகன், ரி. தர்சிகா, என். தயாபரன், வி. லோகநாதன்;

(உ-232)

## அமைச்சர் ஹக்கீமுடன்
# மேலும் 3 முஸ்லிம்கள் 4-ம் சுற்றில் பங்கேற்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நான்காம் சுற்றுப் பேச்சுக்களின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் மேலும் மூவர் முஸ்லிம்கள் சார்பாக கலந்துகொள்ளவுள்ளனர்

தென்கிழக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் எம் எல் ஏ காதர் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் எச் எல் ஹஸ்புல்லா எம் ஐ என் மொகைதீன் ஆகியோரே இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ளனர்

இந்தக் குழு இன்று தாய்லாந்து பயணமாகவுள்ளது இதேவேளை அமைச்சர் ஹக்கீமுடன் இம் மூவரும் கலந்துகொள்வது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

(உ-8)

# பொ. ஐ. முன்னணியின் குழுக் கூட்டம் 10-ம் திகதி

(கொழும்பு)

எதிர்வரும் 10ம் திகதிநடைபெறவுள்ள பொ. ஐ. மு. யின் நிறைவேற்று குழுக் கூட்டத்தில் சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ் கட்சியும்சமாதான நடவடிக்கைகளில் பொதுஜனஐக்கிய முன்னணி ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என வலியுறுத்தவுள்ளன.

இக்கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

பொ ஐ மு க்கும் ஜே வி பிக்கும் இடையில் கூட்டணி பற்றிய பேச்சுக்கள் நடைபெற்று வருவதை முன்னிட்டு முன்னணிக் கட்சிகளுக்குள் சில சந்தேகங்கள் நிலவுகின்றன

சமாதானத் திட்டத்தை ஆக்கபூர்வமான முறையில் விமர்சிப்பதுடன் அதற்குச் சாதகமான நிலைப்பாட்டையே எடுத்தல் வேண்டும் அதாவது, ஜே வி பி யின் நிலைப்பாட்டிற்கு இது முரணானதாகும்,

ஜனாதிபதி குமாரதுங்க கடந்த திங்களன்று ஜே வி பி தலைவர்களை சந்தித்து பொது முன்னணி அமைப்பது பற்றி பேசியிருந்தார்;

சமாதான விவகாரத்தில் பொதுவான நிலைப்பாடொன்றை எடுக்க முடியாமல் போனதன் காரணத்தினால் பொதுமுன்னணி பற்றிய இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை. (த)

## விளையாட்டு போட்டி

(சண்டிலிப்பாய்)

புனித யூதாதேயு ஆலய இளைஞர் மன்றத்தினால் நடாத்தப்படும் இல்லங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று பி ப 2- 00 மணியளவில் மேற்படி ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது; (க- 258)

# முஸ்லிம் புத்திஜீவிகள் 4 ஆம் சுற்று பேச்சில்

# பங்கேற்க வழிவகை செய்ய வேண்டும்

## அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நான்காவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் போது அரச பிரதிநிதியாக அமைச்சர் ரவூப்ஹக்கீம் கலந்து கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை, ஆனால் முஸ்லிம்கள் குறித்த விடயங்கள் அங்கு ஆராயப்படக் கூடாது என முஸ்லிம் காங்கிரஸ் மாற்று அணியின் பிரதி தவிசாளரும் அமைச்சருமான மசூர் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளிற்கு அமைச்சர் ஹக்கீமை அனுப்பக் கூடாது என அமைச்சர் எம். எச். மொகமட் தலைமையிலான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்து கருத்துக் கேட்டபோதே அமைச்சர் நூர்டீன் மசூர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் சம்பந்தப் பட்ட முக்கிய விடயங்கள் மீள் குடியேற்றம் மற்றும் சமஷ்டி ஆட்சிமுறை அமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படும் வேளை, முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்தி ஜீவிகள் குழுவொன்று பங்குபற்ற வேண்டும்

இது சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

வடக்கு- கிழக்கு பிரதேசத்தில் 75 சதவீதமான முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்ற கட்சி முஸ்லிம் காங்கிரஸாகும்.

இதனால் தான் விடுதலைப் புலிகள் எம்மை பேச்சுக்கு அழைத்தனர் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினையும் பேசப்படுகின்றமையினால் அவ் இனம் சார் புத்திஜீவிகள் அடங்கிய குழுவொன்று இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ8)

## வணிகர் கழகம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சகல வர்த்தக நிலையங்களும் சனிக்கிழமைகளில் அரைநேரமும் ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் முழு நேரமும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் எனவும்.

இது 4 ஆம் திகதி முதல் கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் வணிகர் கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இனவாதிகளுடனான ஜனாதிபதியின் கூட்டு

# சமாதான முயற்சிக்கு வைக்கும் வேட்டு

## தமிழ் கட்சிகளின் கூட்டு இப்படிச் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் தலைவியாக விளங்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா சமாதானத்தை எதிர்க்கும் நோக்குடன் வெளிப்படையாக வன்றி மறைமுகமாக செயற்படுவதன் மூலம் மீண்டும் ஓர் யுத்தத்தை ஆரம்பிக்க விரும்புகிறார், தமிழ்க் கட்சிகள் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள தமிழ்க்கட்சிகள்,

தற்போது நாட்டில் யுத்தம் ஓய்ந்துள்ளது. இவ்வாறானதொரு காலகட்டத்தில் ஜனாதிபதி சில அடிப்படை இனவாதக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து சமாதான முயற்சிகளைக் குழப்பமுயல்கிறார்.

மக்கள் விடுதலைமுன்னணி போன்ற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து, வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியேறுவது தொடர்பாக ஜனாதிபதி நடந்து கொள்ளும் விதம் இதனை தெளிவாக வெளிக் காட்டுகின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கருத்துத் தெரிவிக்கையில்; சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி அன்று தொடக்கம் இன்றுவரை சரியான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

நாட்டில் சர்ச்சைக்குரிய அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக பேசப்படும் போது ஜனாதிபதி வழமை போலவே நடந்துகொள்கிறார்.

இப்பிரச்சினைகளை அமைதியாகவும், சுலபமாகவும் தீர்க்க முயலாமல் அதற்கு மாறாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடனும், மக்கள் விடுதலை முன்னணியுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார்.

இது ஜனாதிபதி சமாதான நடவடிக்கைகளை ஓரம்கட்டும் நோக்குடன் எதிர்மறையாக சிந்தித்து செயற்படுவதனை காட்டி நிற்கிறது.

நாட்டின் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு மிகவும் கவலைக்குரியது.

அதிஉயர்பாதுகாப்புவலயம் என்ற விடயத்தை ஜனாதிபதி சரியாக புரிந்து கொள்ளவில்லை.

தத்தமது வீடுகளில் சுதந்திரமாக மீளச் சென்று வாழ்வதற்கு இடமளியுங்கள் என்றே பொதுமக்கள் கோருகின்றனர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்தரெலோ என். ஸ்ரீகாந்தா மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவைசேனாதிராஜா ஆகியோரும் இவ்விடயத்தில் தங்கள் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். (உ-8)

## மலசல கூடங்கள் துப்புரவு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையில் உள்ள மலசல கூடங்கள் துப்பரவு செய்யப்படாமையால் துர்நாற்றம் வீசுவதாக வர்த்தகர்கள் சார்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் சம்பந்தமாக உரிய அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## யாழ். மாணவர் கல்விக்கு ஜப்பானியர் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 100 மாணவர்களுக்கு ஜப்பானில் உள்ள வசதி படைத்த குடும்பங்கள், அவர்களது கல்வி முடிவடையும் வரையிலான செலவுகளைப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும் இருந்து 8 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களே இதற்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களை இம்மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் இடம் பெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்து செல்லப்படவுள்ளனர்.

இந் நிகழ்ச்சியில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா, கல்வி அமைச்சர் மற்றும் மாணவர்களை பொறுப்பேற்கவுள்ள ஜப்பானிய குடும்பத்தினர் ஆகியோரே கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அதிபர்கள் சங்கம் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

புலிகளுக்கு வானொலி உபகரணங்கள்

## உண்மை நிலையை விளக்கி நோர்வே அறிக்கை

(கொழும்பு)

தனியார் வானொலி ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்கு உதவி செய்யுமாறு இலங்கை அரசு கேட்டுக் கொண்டமைக்கு இணங்கவே விடுதலைப்புலிகளுக்கு இந்த உதவியை செய்தோம்.

வேண்டும் என்று நோர்வே அரசு இதில் தலையிடவில்லை என்று நோர்வே அரசு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நவீன வானொலிக் கருவிகள் வழங்கியமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேயிடம் அறிக்கை கோரியமைக்கிணங்க நோர்வேத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

சுன்னாகம் புனித அந்தோனியார் இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டுப் போட்டி, மன்றத் தலைவர் பிலிப் ஞானேஸ்வரன் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-232)

## மாமனிதர் குமாரின் 3 வது நினைவஞ்சலி இன்று

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், நினைவு மலர் வெளியீடும் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கனகசபை சிவானந்த மூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயிலில் பிரதமகுரு சோ. தண்டபாணி தேசிக ஐயர், யாழ். மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜே. பி. இ. செல்வராசா ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

வரவேற்புரையை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்காங்கிரஸின் தலைவருமான அ. விநாயகமூர்த்தியும், நினைவுப் பேருரையை கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் வி.ரி தமிழ் மாறனும் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை குமார்பொன்னம்பலம் கடைசியாக கனடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு ஆற்றிய உரை ஒளிப்பதிவு நாடா மூலம் காண்பிக்கப்படவுள்ளது. (க-5-43)

## முட்கம்பி வேலிகளால் மீனவர்கள் பெருமிடர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு முட்கம்பி வேலிகள் பெரும் தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.

குருநகர் கரையோரப் பகுதிகளில் படையினர் தமது பாதுகாப்புக் கருதி முட்கம்பி வேலிகளைப் போட்டுள்ளனர்.

இவற்றைக் கடந்தே மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டி இருப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (உ-6)

## புலிகளின் நிலைப்பாட்டில் அலிசாகிர் மகிழ்ச்சி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தத்தைக் கைவிட்டு இலங்கை அரசுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதன் காரணமாகவே இலங்கையின் அபிவிருத்திக்கு உலகவங்கி உதவ முன்வந்துள்ளது.

இவ்வாறு கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தத்தைக் கைவிட்டு நோர்வே அரசின் வேண்டுகோளிற்கு இணங்க சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறித்து மிக்க மகிழ்ச்சி அடைவதுடன் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம் என்று மேலும் அவர் கூறியுள்ளார். (உ-10)

# சுகாதாரம் பேணாத உணவு விடுதிகள் மீது அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுவிடுதிகள், சிற்றுண்டிச் சாலைகளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத உணவு வகைகளும் சுகாதார முறைப்படி பேணப்படாத உணவு வகைகளும் சுகாதாரப் பகுதியினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டு நிலத்தில் கொட்டி அழிக்கப்பட்டன.

கடந்த ஒரு மாத காலத்தில் 28 பேரை பலி கொண்ட வைரஸ் காய்ச்சலுக்கு சுகாதார முறைப்படி உணவு வகைகள் பேணப்படாததே காரணமென யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இதனை அடுத்தே மாநகர சபை எல்லைக்குட்பட்ட உணவு விடுதிகள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளுக்குச் சென்ற மாகாண சுகாதார சேவைப் பகுதியினர் மற்றும் யாழ். போதானச வைத்திய சாலையின் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார முறைப்படி பேணப்படாத உணவுவகைகளை நிலத்தில் கொட்டி அழித்தனர்.

அதேவேளை சுகாதார முறைப்படி உணவு வகைகளைப் பாதுகாப்பதில் அக்கறையின்றி செயற்படும் உணவு விடுதிகளை மூடுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (த-6)

# தமிழ் மக்களின் உரிமைப் போருக்கு எமது ஆதரவு என்றும் தொடரும்

## நோர்வே கம்யூனிஸ்ட் பிரதிநிதி றூனாமரியா

(ஒஸ்லோ)

தமக்கான தீர்வு என்ன என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டுமென நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சிப்பிரதிநிதி றூனா மரியா கிரியா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற வகையில் அந்நிய சக்திகள் இலங்கையில் தமது தளங்களை நிறுவ முயற்சிக்கின்றன. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக வெளிச்சக்திகள் கரிசனை கொள்ளவே செய்யும், ஆனால் அதனை விடவும் தமிழ் மக்கள் அதிக அக்கறை கொள்ளவேண்டும். மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம் தோல்வியடைந்ததற்கு அது தனிப்பட்டவர்களின் சமாதான முயற்சியாக இருந்ததே காரணம் அத்துடன் அங்கு இஸ்ரேலினாலேயே தீர்வுகள் திணிக்கப்பட்டன.

இலங்கையைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருமே பேச்சுக்களில் பங்கு பற்றுகின்றனர்.

இதனால் இந்தச் சமாதான முயற்சி மேலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

எமது கட்சி தமிழ்மக்களின் உரிமையைப்போராட்டத்தை தொடர்ந்து ஆதரித்து வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# கசிப்பு விற்ற பெண்ணுக்கு ரூபா 10 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு விற்பனை செய்த பெண் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்விதிக்கப்பட்ட சம்பவம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அண்மையில் இடம்பெற்றது.

அச்சுவேலியைச் சேர்ந்த தங்கவேலு தங்கராணி என்பவரே அச்சுவேலி பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட வேளையில், இவ்வழக்கை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

இதேவேளை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் கருதப்படும் மேலும் 06 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்கள் விபரம் வருமாறு;

ச. றதீப் (புன்னாலைக் கட்டுவன்), இ. அகிலன் (புன்னாலைக்கட்டுவன்), சசிக்குமார் (உரும்பிராய்), வாசுதேவன் (ஊரெழு) செ. நகுலன் (அளவெட்டி), யே. கஜேந்திரன் (ஊரெழு) ஆகிய ஆறுபேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர். (க-232)

# தமிழ்க் கட்சிகளின் கருத்தை மறுத்து ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

பிரதம படைத்தளபதிக்கும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்குமிடையே நடைபெறக் கூடிய கருத்து வெளிப்பாடுகள் எவையும் பொது மக்கள் அறிவதற்காக, பொதுவில் கூறப்பட்டவையல்ல. உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியமர்வு தொடர்பில், இராணுவத்தரப்பு தெரிவித்திருக்கக் கூடிய ஏதேனுமொரு கருத்துக்குப் பதிலாக ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைபொது அறிவித்தல் என்ற வகையில் அறிவித்திருக்க வில்லை' என்று ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

போரைமீண்டும்தொடக்குவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்வதாக மாவை சேனாதிராஜாஎம் பி,என்ஸ்ரீகாந்தா, சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோர் வியாழனன்று டெயிலி மிரர்கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளியிட்டிருந்த கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையிலேயே மேற்படி ஜனாதிபதி செயலக அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

'அறிக்கையில் மேலும், வியன்னா சாசனம் எனப்படும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சாசனம் பாரதூரமான விதத்தில் மீறப்பட்டது தொடர்பாகவே ஜனாதிபதிநோர்வே அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டார். ஒரு அரசுத்தலைவரின் பொறுப்பு அது!

வானொலிசாதன உரிமைப் பத்திரம்விடயத்தில், பிரதான கரிசனை வானொலி ஒலிபரப்பு சாதனம் பற்றியதன்று ஆனால் அதனுடன் தொடர்பில்லாத வீ.எஸ் ஏ. ரீ. தொடர்பாடல் சாதனம் பற்றியதாகும்.

தொடர்பான சாதனம் இராணுவ உபகரணம் என்னும் வகையை சார்ந்தது. புலிகளின் இராணுவ அல்லது தொடர்பாடல் சாதனங்கள் மீளவும் பெறப்படுவது பற்றி போர்நிறுத்த ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப் பட்டிருக்க வில்லை.

மேற்படி விடயங்களில் ஜனாதிபதி செயற்பட்டவிதம் சமாதானநடவடிக்கைகளுக்கு குந்தகமானது அல்ல,இவ்வாறுஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# இந்திய மீனவர் விடுதலை

(கிளிநொச்சி)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்த 36 இந்திய மீனவர்களும் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் தமிழகம் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ரூபா 2 லட்சம் நிதியுதவி

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு மருதங்கேணி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத் திருப்பணி வேலைகளுக்கென இந்து கலாசார அமைச்சு 2 இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளது. (க-52)

# 50 மீனவர்களுக்கு வெளி இணைப்புஇயந்திரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடந்த ஆண்டு 50 மீனவர்களுக்கு தவணை முறைக் கடன் அடிப்படையில் வெளி இணைப்புஇழுவை இயந்திரங்களை வழங்கியுள்ளது.

இதற்கான கடனை ஹற்றன் நசனல் வங்கி, செலான் வங்கி ஆகியன வழங்கியுள்ளன.

இதேவேளை, இம்மாதம் மேலும் 25 மீனவர்களுக்கு கடன் அடிப்படையில் வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்தார். (உ-6)

# மணல்விலை அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் ஒரு டிராக்டர் மணலின் விலையை 200 ரூபாவால் அதிகரித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி முதல் இம் மணல் விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளதாக வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத் தலைவர் எம் அழகராசா அறிவித்துள்ளார். (க-52)

# இ. தொ. காங்கிரஸ் அமைப்பாளர் சூட்டுக்குபலி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அமைப்பாளர், கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தெமட்டகொட என்ற இடத்தில்இடம்பெற்ற இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யோகராஜன் என்பவரே இவ்வாறு கொலைசெய்யப் பட்டுள்ளார்.

இதேவேளை, இதுதொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளைமேற் கொண்டுவருவதாகவும் எனினும்இது வரையும் இதுதொடர்பாக யாரும் கைதுசெய்யப்பட வில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-10)

# சேவை நலன் பாராட்டு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையில் உதவி மருத்துவ அதிகாரியாகப்பணியாற்றிய டாக்டர் எஸ். சிவயோககுரு அரச சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி வல்வெட்டித் துறை மக்கள், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதிகே.மயிலேறும் பெருமாள் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை சேவை நலன் பாராட்டு விழா நடாத்துகின்றனர்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்,பருத்தித்துறை சட்டத் தரணிகள் சங்கத் தலைவர், ஆர் உருத்திரா, பருத்தித் துறைபிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் கே. கனகரத்தினம் உட்பட இன்னும் பலர் இந் நிகழ்வில் கலந்து கருத்துரை வழங்குவர். (க-52)

# விமானநிலைய தாக்குதல் சட்டமா அதிபருக்கு சி. ஐ. டி. அறிக்கை

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் மீது 2001 ஆம் ஆண்டுநடத்திய தாக்குதல் தொடர்பான இரகசியப்பொலிஸ் புலன்விசாரணைகளின் அறிக்கையொன்று சட்டமாஅதிபருக்குஅனுப்பப் பட்டுள்ளது.

6 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இவ்அறிக்கை 19 பகுதிகளைக் கொண்டது. சட்டமாஅதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்காகஇவ் அறிக்கை அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறுநிலைகளில் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களைஅடிப்படையாகவைத்து இந்தஅறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

விமானநிலையத்தாக்குதல் தொடர்பாக நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப் பட்டபோதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைசெய்யப்பட்டுவிட்டனர்

விடுதலைப்புலிகள்என்று சந்தேகிக்கப்படும் ஐவர்மீது குற்றப்பத்திரிகைதாக்கல்செய்யப் படும்என்று சட்டமாஅதிபர் உச்ச நீதிமன்றுக்குஏற்கனவே அறிவித்திருக்கிறார். (பி)

# ஒன்றுகூடல்

திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் ஒன்றுகூடலும் விசேட திருப்பலியும் இன்று மு.ப 10.30 மணிக்கு மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-6)

# சட்ட விரோதமாக மரம் வெட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை

(பருத்தித்துறை)

வல்லிபுர குடத்தனை, மலைநாட்டுப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக அனுமதியின்றிச் சவுக்கு மரங்கள் வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென வடமராட்சி கடற்புலிகள் பொறுப்பாளர் பாரதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக் காலமாக இப் பிரதேசங்களில் விறகுக்காக சட்டவிரோதமாக சவுக்கு மரங்கள் வெட்டப்படுவதனால் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. இதைத் தடுக்கு முகமாகவே மேற்கண்ட, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி சவுக்கம் தோப்புக்குள் எவரும்செல்லக் கூடாதென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலக மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 10 மணிக்கு பதில் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடத்தில் செயற்படுத்தப்படவுள்ள பல புதிய அபிவிருத்தி திட்டங்கள், மற்றும் கல்வி, சுகாதாரம், மின்சாரம், விவசாயம், கால்நடை, போக்குவரத்து துறைகள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்படவுள்ளது. (உ-252)

# அரச அதிகாரிகள் போல் நடித்த திருட்டுக் கும்பல்

(கண்டி)

அரசாங்கஅதிபர்கள்,பிறப்பு இறப்பு பதிவாளர்கள்,உதவிப் பொலிஸ் அத்தியாட்சகர் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் தலைவர்கள் போன்று நடித்தும், சான்றிதழ்கள், பல்வேறு ஆவணங்கள் வழங்கியும் மோசடி புரிந்து வந்த மூவர் அடங்கிய கும்பல் ஒன்றை பொலிசார் மடக்கி பிடித்துள்ளனர்.

போலிறப்பர் முத்திரைகள், கடிதத் தலைப்புகள், போன்றவையும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இரகசிய தகவல் ஒன்றை யடுத்து ஒரு வீட்டில் வைத்து இம் மூவரும் பிடிக்கப்பட்டனர்.

எஸ். எம். றிஸ்லி, எம். எச். எம். சாஜகான், எஸ். எம். ஹரிஸ் ஆகிய அம் மூவரும் கண்டி பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு ஜனவரி 8 ம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (பி)

# மீளக்குடியமராதோர் விபரங்கள் சேகரிப்பு

(ஆனைக்கோட்டை)

1990 ஆம் ஆண்டில் இருந்து குடாநாட்டிற்குள் இடம் பெயர்ந்து இதுவரையும் மீளக் குடியமர முடியாத குடும்பங்கள் பற்றிய விபரங்களை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அந்தந்த பிரதேச செயலர் ஊடாக திரட்டவுள்ளார்.

இவை மீளக்குடியமரும் மக்களின் மொத்தத் தொகையைக் கணிக்கும் வகையிலேயே திரட்டப்படவுள்ளன.

தவிரவும் இத்தரவின் அடிப்படையில் அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர் மற்றும் யுத்த நிறுத்த கண்காணிப்பாளர் ஆகியோரிடமும் இது சமர்ப்பிக்கப்படவுள்ளது. (உ-10)

# ஈராக்கின் பிடிவாதம் போருக்கே வழி செய்யும்

(வாஷிங்டன்)

ஈராக்கின் பிடிவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர' யுத்தமே இறுதித் தீர்வாக அமையுமென அமெ ரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

ரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள போட்கீற் என்ற இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றின் போது உரையாற்றுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு சர்வதேச சமூகத்துடன் இணைந்து செல்லக் கூடிய வாய்ப்பு ஈராக் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதனை அவரே தவறவிடப் போகிறார் என்று சுட்டிக்காட்டிய அதிபர் புஷ், அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தான் இடப்போகும் உத்தரவுக்காக அமெரிக்காவின் முப்படைகளும் காத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் ஈராக் பாரியதொரு பாதிப்பை எதிர்நோக்கப் போகிறது என்று தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்

(02)

# மகாராஷ்டிர மாநிலத்தில் ரயில் விபத்து; 10 பேர் பலி

(புதுடில்லி)

இந்திய மகாராஷ்டிர மாநிலத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ரயில் விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 55 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மகாராஷ்டிர மாநிலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஷேக் குந்தர பாத் என்ற கடுகதி ரயில் பொருட்களுடன் மகாராஷ்டிர மாநிலத்தில் நின்றிருந்த ரயிலுடன் மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

பணியாளர்களின் கவனக்குறைவாலேயே இந்த அனர்த்தம் நேர்நதுள்ளதென ரயில்வே போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதீஸ் குமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை இவ்விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-02)

# குளோனிங் குழந்தை குறித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(வாஷிங்டன்)

குளோனிங் முறையில் பிறந்த முதலாவது குழந்தையின் சட்ட பூர்வமான பெற்றோர்களை நிரூபிக்குமாறு கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைகளை இன்னும் ஓரிரு வாரங்களில் மேற்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த விசாரணையின் போது குழந்தையின் பாதுகாவலர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும், அத்துடன் நீதிமன்றில் ஆஜராகும் பாதுகாவலர் குழந்தையின் சட்ட பூர்வ உரிமை குறித்து பதிலளிக்க வேண்டும் என்றும் வழக்கைத் தாக்கல் செய்த சட்டத்தரணி கேட்டுள்ளார்.

இதேவேளை குளோனிங் முறையிலான இரண்டாவது குழந்தை ஐரோப்பாவின் போலந்து நாட்டில் அடுத்த வார இறுதியில் பிறககவுள்ளதாகக் கூறப்படுகிறது.

(உ-02)

# துருக்கியின் வான் பரப்பை பயன்படுத்தக் கோரிக்கை

## மக்கள் கடும் எதிர்ப்பு

(அங்காரா)

ஈராக் மீது தாக்குதல் நடத்துமிடத்து துருக்கியின் வான் பரப்பை பயன்படுத்த அனுமதியளிக்க வேண்டுமென அமெரிக்கா துருக்கி மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது.

இவ்வழுத்தத்தை எதிர்த்து அமெரிக்காவுக்கு உதவக் கூடாதென துருக்கியில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை அந்நாட்டு மக்கள் நடத்தியுள்ளனர் துருக்கியின் தென் பகுதியிலுள்ள விமானத் தளங்களை அமெரிக்கா ஏற்கனவே பயன்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் ஏனைய விமானத் தளங்களையும் வான்பரப்பையும் பயன்படுத்த அனுமதி கோரியுள்ளதுடன், துருக்கியின் தரைவழிப் பாதையூடாகத் தனது இராணுவத்தை ஈராக்கின் வட எல்லைக்கு நகர்த்தவும் திட்டம் தீட்டியுள்ளது.

இந்த நடவடிக்கைகள் எவற்றுக்கும் துருக்கி இடமளிக்கக் கூடாது என்றே துருக்கி மக்கள் இஸ்தான்புல் நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பியுள்ளதுடன் அமெரிக்காவின் தேசியக் கொடியையும் தீவைத்து எரித்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை பாகிஸ்தானிலும் நேற்று அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெற்றுள்ளது.

ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தனது படைகளைக் குவித்து வருவதைக் கண்டித்தே இப்பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இதில் பாகிஸ்தானிலுள்ள 6 கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(பி-02)

# ஈராக் விடயத்தில் சிலி தனித்து இயங்கும்

(சான்டியாகோ)

ஈராக் விடயத்தில் தாம் கொணடுள்ள நிலைப்பாட்டில் அமெரிக்கா தலையிடுவதை அனுமதிக்கப் போவதில்லை என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் புதிதாக அங்கத்துவம பெற்றுள்ள சிலி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் மிகப் பெரிய வர்த்தக உறவுகளை கொண்டுள்ள போதிலும் பாதுகாப்புப் பேரவையில் சிலி நடுநிலையாகவே இயங்கும் என்று சிலியின் வெளிவிவகார அமைச்சர் ஷெலாடர் அல்டியர் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன் பல்வேறு விடயங்களில் தொடர்பு வைத்துள்ளதையிட்டு திருப்தியடைவதாகக் கூறிய அவர் ஏனைய விடயங்களில் தனித்துவத்தைப் பேணப்போவதாகவும் இதில் அமெரிக்கா தலையிடுவதை விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 660 மில்லியன் டொலர் பெறுமதியான யுத்த விமானங்களை அமெரிக்காவிடமிருந்து சிலி கொள்வனவு செய்துள்ளதாகக் கூறிய ஷெலாடர் அல்டியர் வர்த்தகப் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள் அமெரிக்காவுடன் எப்போதுமுள்ளவாறு அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(பி-02)

WORLD NEWS உலக தரிசனம்

# மூன்று பாதிரிமாரைக் கொன்ற அல்கெய்டா தீவிரவாதி

(சனா)

யேமனில் மூன்று அமெரிக்க பாப்டிஸ்ட் மதப் போதகர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் எல்லோரையுமே தேடிப்பிடித்துக் தண்டிக்கப் போவதாக அமெரிக்கா சூளுரைத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே 30 வயதான ஒருவரை யேமன் பொலிசார் கைது செய்துள்ளனர். இஸ்லாமிய தீவிரவாதியான இவர் தென்யேமனியிலுள்ள பாப்டிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரியின் மீது தாம் தாக்குதல் நடத்தியதன் நோக்கம் இறைவனின் அருகில் செல்வதற்காகவே என்று கூறியுள்ளனர்.

கடந்த மாதம் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை நடத்தி அல்கெய்டா தீவிரவாதிகளைக் கொன்றது போல் மேலும் தாக்குதல்களை நடத்தும்படி யேமன் அரசு அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

(பி)

# அமெரிக்காவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு வடகொரியா தயார்

## ஏற்பாட்டாளராக தென்கொரியா செயற்படும்

(பியோங்யாங்)

அமெரிக்காவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த தாம் தயாராகவிருப்பதாக வடகொரியா அறிவித்துள்ளது.

கடந்த வாரம் தமது நாட்டில் இருந்த சர்வதேச அணு ஆயுத கண்காணிப்பாளர்களை வடகொரியா வெளியேற்றியிருந்ததை அடுத்து வடகொரியாவுக்கும அமெரிக்காவுக்குமிடையிலான முறுகல் நிலை அதிகரித்திருந்தது.

இந்த முறுகல் நிலையை சுமூகமாக தீர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே வடகொரியா தற்போது அமெரிக்காவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நட்த்தத் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பையடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்கு தென்கொரியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இதேவேளை,சீனாவுடன் பேச்சுக்களை நடத்தி முடித்து விட்டு நாடு திரும்பிய வட கொரியாவின் வெளிவிவகார அமைச்சர் இராஜதந்திர நகர்வுகளுடன் கூடிய பேச்சுக்களில் ஈடுபட சீனாவும் வடகொரியாவும் இணங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் முறுகல் நிலை எந்தளவில் ஏற்பட்டாலும் வட கொரியாவுக்கான உணவு உற்பத்திகளை அமெரிக்கா நிறுத்தப்போவதில்லையென அமெரிக்கத் தேசிய திணைக்கள அதிகாரி ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-02)

# புத்தாண்டுக் கொண்டாட்டம் பிலிப்பைன்ஸில் 12 பேர் மரணம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி நடந்த பட்டாசு வெடிப்புச் சம்பவத்தின் போது 12 பேர் இறந்தனர்; 423 பேர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை டகுராங் நகரில் பட்டாசு வியாபாரிகள் மீது குண்டு வீசப்பட்டது. இதில் 9 பேர் இறந்தனர்.

இச்சம்பவத்திற்கு வியாபாரப் போட்டி அல்லது முஸ்லிம் தீவிரவாதிகளின் செயலாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றொரு சம்பவத்தில் தலைநகர் மணிலா பகுதியில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக வானை நோக்கி துப்பாக்கியால் சுட்ட சம்பவத்தில் குண்டு பாய்ந்து 3 பேர் இறந்தனர். இதில் 11 பேர் குண்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(பி)

## தாய்நாட்டுக்கு திரும்புங்கள்!

# இந்திய விஞ்ஞானிகளுக்கு வாஜ்பாய் விசேட அழைப்பு

(புதுடில்லி)

இந்தியாவை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் பொருட்டு, வெளிநாடுகளிலுள்ள இந்திய விஞ்ஞானிகளை மீண்டும் தாய்நாடு திரும்புமாறு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான புதிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கொள்கைகள் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது வாஜ்பாய் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் இது குறித்து மேலும் கூறுகையில்; தாய்நாட்டுக்குத் திரும்பும் விஞ்ஞானிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் விஷேட திட்டங்களை நடைமுறைப்புடுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(உ-02)



இஸ்ரேலியத் துருப்பினரால் அழித்தொழிக்கப்பட்ட வீட்டின்சிதைவுகளுக்குள் பிஞ்சுப் பாலகன்.

# விடைபெறும் 2002



படைகளின் அணிவகுப்பை ஏற்கும் தலைவர் பிரபாகரன்



ஈழத்தில் எழுச்சி கொண்ட மகளிர் படையணி



பகை மறந்த பரவசத்தில்.....



ஒஸ்லோ மாநாட்டில் ஒருமித்த குரல்



கடல் வலய நடை முறைகள் குறித்த ஒப்பந்தத்தில் முத்தரப்பினரும் கைச்சாத்து

# ஈழத்தமிழர்களின் வாழ்வுக்காய்குரலெழுப்பி தியாகியான மாமனிதா குமார் பொன்னம்பலம்

மாமனிதர் குமார் பொன்னம்பலம் கயவர்களால் வெள்ளவத்தையில் வைத்து சுட்டு கொலைசெய்யப் பட்டார். இலங்கைச் சரித்திரத்திலேயே ஒரு தமிழ்த் தலைவர் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த காரணத்திற்காக சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டமை இதுவே முதற் தடவை யாகும். அவர் கொலை செய்யப்படும் போது அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவராக இருந்தார. மாபெரும் தலைவர் ஜீஜீ பொன்னம்பலம் Q.C அவர்களின் மறைவின் பின் கட்சியின தலைமைத்துவத்தை ஏற்று எல்லோரும் மெச்சும் வகையில் வழிநடாத்தி வந்தார்.

### சட்டத்தொழிலும் குடும்பத்தொடர்பும்

நான் சட்டத் தொழிலை ஆரம பித்த காலந்தொடக்கம் அவர் இறக்கும வரை அவருடன் மிகவும் அன்னியோன்னியமாக பழகிவந்தேன். என்னை அவரும் அவருடைய குடும்பத்தினரும் அண்ணை என்றே அழைப்பர். அவரது மறைவினால் அவரது குடும்பத்திலும் பார்க்க நான் தான் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளேன்

நான் எனது சட்டத்தொழிலை அவருடன் இணைந்தே செய்தேன். அப்போதைய அரசியல் சூழ்நிலைக் கேற்ப அவர் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவராக இருந்த போதும் தமிழீழ தேசியத் தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரனின் அரசியல் சித்தாந்தத்தை ஏற்று இலங்கை வாழ் தமிழரது பிரசசினையை திம்புக் கோட்பாட்டினடிப்படையில் தீர்க்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அப்படியான ஒரு தீர்வைக் கொண்டுவருவதற்கு எல்லா வழிகளிலும் செயற்பட்டார்.

இதே கொள்கையையே கட்சியும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது. அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வு யோசனைக்கு அடித்தளமிட்ட பெருமை அவரையே சாரும் இலங்கையில் விடுதலைப் புலிகளின பெயரை உச்சரிக்க எவரும் திராணியற்று இருந்த காலத்தில் இலங்கையின் இனப்பிரசசினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகளுடன் மட்டுமே பேசித் தீர்க்க வேண்டுமென்ற யதார்த் தத்தை பகிரங்கமாக வெளிக் கொணர்ந்த பெருமை அவரையே சாரும். இன்னும்வேலுப்பிள்ளை பிரபாகரனே தமிழர்களின் தேசியத்தலைவர்என்றும்,புலிகளே வடகிழக்கு தமிழர்களின் ஏக பிரதிநிதிகள்என்றும் ஏற்று அதை இலங்கையிலும் சர்வதேசம் எங்கும் ஆணித்தரமாக எடுத்துரைத்த வர் குமார் பொன்னம்பலமே. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையையும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களையும் சர்வதேச மயப்படுத்திய பெருமை அவரையே சாரும். இதற்காக அவரிற்கு என்றும் தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கின்றனர்.

### சந்திரிகாவே பொறுப்பு

அவரின் இக்கொள்கையினால் அவரைக் கைது செய்யும் நோக்குடன் அப்போதைய அரசு இரகசியப் பொலிஸை அவரது வீட்டிற்கு அனுப்பி பல மணி நேரமாக விசாரணை செய்து அவரது வாக்கு மூலத்தை எடுத்தது. இன்னும் செம்மணி புகழ்

**மூன்றாம் ஆண்டு நினைவு தினம் இன்று**



அம்மணி சந்திரிகா அம்மையார் தென்னாபிரிக்காவில் வைத்து தமிழர்கள் இலங்கைப் பூர்வீகக் குடிகள் அல்லர் எனப்பேட்டியளித் ததைக் கண்டித்த ஒரே தமிழ்த் தலைவர் குமாரே. அவர் இறப்பதற்கு சொற்ப நாட்களுக்கு முன்னர் சந்திரிகா அம்மையார் தொலைக்காட்சியில் விடுதலைப் புலிகளை கடுமையாகத் தாக்கி புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் கொழும்பில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்ற தோரணையில் பேசியிருந்தார். மறுநாட்காலை குமார் என்னுடன் தொடர்பு கொண்டு சந்திரிகா அம்மையாரின் தொலைக்காட்சி உரையை குறிப்பிட்டு தான் நீண்ட காலம் வாழ் வது கடினமென என்னிடம் சொன்னார். அவரின் கொலைக்கு சந்திரகா அரசே பொறுப்பேற்க வேண்டும்.

குமாரின் கொலையை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி யான விக்கிரமசிங்க விசாரணை அறிக்கை யையும் கொலையோடு சம்பந்தப் பட்டவர்களின் விபரத்தையும் அந்த ஆண்டு புரட்டாதி மாதமே ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளித்தும் அவர் அது தொடர்பாக எவ்வித நடவடிக் கையும் எடுககவில்லை. நான் இது தொடர்பாக பலமுறை பாராளுமன்றத்தில் எனது [illegible] விசனத்தை தெரிவித்துள்ளேன். தமிழினம் அநாதையாக்கப்பட்டு ஒரு தகுந்த தலைமைத்துவம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது அந்த வெற்றிடத்தை நிரப்பத் தகுந்த ஒரே தமிழ்த் தலைவராக விளங்கியவர் அவரே. இதை அறிந்து தான் தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் குமார் பொன்னம்பலம் இறந்தபோது அவரிற்கு தமிழீழத்தின் அதியுயர் விருதான மாமனிதர் என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார். அவர் இறந்த பின் நான் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றேன். குமாரின் புகழே என்னை பாராளுமன்றிற்கு செல்ல வழிவகுத்தது.

### ஜனநாயகக் கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்

புலம் பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இலங்கை அரசியல் சரித்திரம் எழுதும் போது ஜனநாயகக்கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் (Democratic People's Alliance Manifesto) உருவாவதற்கு இவர் ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்

இந்த விஞ்ஞாபனத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தினேஸ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ், பல்கலைக்கழக மாணவர் முன்னணி என்பன சேர்ந்து உருவாக்கின. இதில் அனைத்துக கட்சிகளும் கையெழுத்திட்டன. இதை சிறிமா [illegible] பிரச்சினை அப்பொழுதே தீர்க்கப்பட்டிருக்கும். 1985 தொடக்கம் இறக்கும் வரை அவர் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகாலத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவசமாக வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். அவர் தமிழ் இளைஞர்களுக்கு ஆற்றிய சேவைஇது வரை வேறு எவரும் செய்யவில்லை.

ஆகையால் தான் போலும் அவர் இறந்த போது களுத்துறைச் சிறைச்சாலையில் கறுத்தக் கொடி பறக்க விடப்பட்டது. அவரது மறைவுக்கு சற்று முன் தேர்தலை எதிர்நோக்கி தமிழ பகுதிகளில் போட்டியிடு வதற்கு ஒரு பட்டியலை அவர் தயாரித்தார். இதுவும் அவரது கொலைக்கு காரண மாக அமையலாம். இவரைப் போல இன்னொருவர் பிறக்கப் போவதில்லை. நானும் என்னுடைய கட்சியும இவரது கொள்கையை தொடர்ந்தும் பின்பற்றுவோம் என உறுதி கூறுகின்றேன்.

**அ.விநாயகமூர்த்தி**
(பா.உ) யாழ்ப்பாணம்.

* * *

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### உடல் எண்-5 கூட்டுஎண்ணாகிய உயிர் எண்-6

5,14,23 போன்ற திகதிகளில் பிறந்து இவர்களுடைய திகதி, மாதம்,வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் இவர்கள் புதன, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள்.பார்ப்பதற்கு ஓரளவு உயர மானவர்களாகவும், கவர்ச்சியான தோற்ற முடையவர்களாகவும் காட்சி யளிப்பர். இவர்களுடைய நடை,உடை பாவனைகள் மற்றவர்களை மயக்கும் அளவிற்கு இருக்கும் என்றும் தெய்வ சக்தி இவர்களை விட்டுப்பரியாது ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்கு மேயானால் இவர்களது முன்னேற்றம் தடைப் படும். அத்துடன் வெட்டிப் பேச்சும் விரயச் செலவும் செய்து கொண்டிருப்பர்.

### சுறுசுறுப்புள்ளவர்கள

இவர்களின் பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால்,தன் திறமையெல்லாம் பொருளீட்டுவதிலேயே செலவு செய்து வாழ்க்கையின் உச்ச நிலையை அடைவர். புகழும், அந்தஸ்தும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகும். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால், நாளுக்கு நாள் தீய வழியில் இறங்கி மனம் நொந்து வருந்துவர்.அதனால் பெயரைப் பொருத்தமான நிலையில் அமைத்துக் கொள்வது அவசியம். எப்போதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிக கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத் தால் சோம்பேறி போன்று தூங்கி விடுவர். அதே நேரத்தில் வேலையை ஆரம் பித்தால் அசுர வேகத்தில் முடித்துக் காட்டுவர்.

இவர்களுக்குப் பல்வேறு தொழில் கள் செய்கின்ற மனிதர்களது தொடர்பு இருக்கும் அதோடு சிறிது நேரத்தி லேயே நன்றாகப் பழகிவிடுவர். எப்போதும நண்பர்கள் புடைசூழ வாழும் பாக்கியசாலி என்றால் மிகையாகாது. பிறரைத் தன் வசமாககிக் கஷ்டப்படாமல் பொருள சேர்த்து சுகமாக வாழ வேண்டும் என்று நினைப்பர். அன்பாகப் பழகும் இவர்கள் தனக்குப் பிடிக்காதவருக்குக் கடுமை யான எதிரியாக இருப்பர். இவரை வெறுப்பவன் கூட அன்பாக இருப்பது போன்று நடித்து விடுவான் .இளமையிலேயே தான் எப்படிச் சுகமாக வாழ்வது என்று அறிந்து வைத்திருப்பதால் மற்றவர்களை அதிகாரம் செய்தும், மகிழ்வித்தும் பொருளீட்டும் வழி தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

### இரசிக்கும் உள்ளம்

இவர்களின் மனம் அழகான பொருள்களைக் கண்டாலே நிலைத்து நின்று இரசிக்கும். இசை நாட்டியம் போன்ற கலைகளை மெய்மறந்து ரசிப்பதால் நல்ல ரசிகன் என்றே கூற வேண்டும். இவர்களுக்குள் பலவீனம் காமம் தான். இதைப் போக்க எப்போதும் கணவன் மனைவி பிரிந்தே வாழக் கூடாது. அப்படிப் பிரிந்திருக்கும் சூழ் நிலை ஏற்பட்டால் தீங்கான காரியங் களில் இறங்க மனம் வழிவகுக்கும். இந்த உலகத்திலுள்ள நல்லதையெல்லாம்நாம் அனுபவிக்கத்தான் பிறந்துள்ளோம் என எண்ணுபவர்களும் இவர்களே. சிறுவயது முதற் கொண்டே யார் எதைக் கூறினாலும்,உடனே புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள்.

சிலர் கல்வியில் தேர்ச்சி பெற்றுச் சிறப்படைவர். பலர் தொழில் செய்து முன்னேற்றமடைவர். அதோடு இவர் களுக்குப் பல நண்பர்கள் உதவமுன் வருவதால் படைப்பலம் உள்ளவர்கள போல்தைரியமாக இருப்பர். சில நேரத்தில் குழப்பங்கள் வந்தாலும சிறிது நேரம் மன வேதனைப்பட்டு பின் தானே தெளிவான தைரியத்தை வர வழைத்துக் கொண்டு சந்தோஷமாக மாறி விடுவர். கடவுள் மேல் நம்பிக்கை கொண்டவர் களாக இருப்பதால் பல இக்கட்டான சூழ் நிலைகளிலிருந்து தப்பித்துக் கொள்வர்.

### நினைத்ததை முடிப்பர்

சமயம்,சட்டம், மருத்துவம் போன் றவற்றில் ஆராய்ச்சியுள்ளவர்களாக விளங்குவர். போட்டி, பந்தயங்களி லும்,சூதாட்டங்களிலும் சிலர் கைதேர்ந் தவர்களாக இருப்பர். வாகனப் பிரியரான இவர்கள்தான் வைத்திருக்கும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்துக் கொள்வர். இவர்கள் கையில்பணம் இல்லாவிட்டாலும், தான் நினைக்கும் காரியங்களை நடத்தி முடிப்பர்.

இதனால் இவர்களைக் கண்டு பலர் மரியாதை கொடுப்பர்.உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாத வர்களாதலால் மற்றவர்கள் இவரை வெள்ளை மனம் கொண்டவர் எனக் கூறுவர். இவர்கள் செய்கின்ற செயல் கள் ஒவ்வொன்றும் பிறருக்குப் பயன்படுவதாக இருப்பதோடு தானும் அதில் இலாபத்தைப் பெற முயலுவர். இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் பெரும் செல்வமும், பெரும்புகழும் பொதுமக்களின் பேராதரவும் பெற்ற மனிதனாக விளங்குவர்.

### தொழில்

இந்த ஆதிக்கக்காரர்களுக்கு ஆடம்பரப் பொருள்கள் சம்பந்தமான அனைத்துத்தொழில்களும் சிறந் தவையே கமிஷன், கண்ராக்ட், ஏஜெனசீஸ் போன்ற தொழிலும், இரும்பு சம்பந்தமான வாகன சம்பந்தமான தொழில்கள் அனைத்தும் இவர்களுக்கு வெற்றி அளிக்கும்.

### நோய்

இந்தஎண்ணிக்கைக்காரர்களுக்கு உடல் உறவு சம்பந்தமான நோய் களும்,நர் சம்பந்தமான நோய்களும் வர வாய்ப்பு இருப்பதால் முன் கூட்டியே கவனித்துக் கொள்வது நலம்.சர்க்கரை, உப்பு போன்றவை களை குறைத்துக் கொள்வது நலம்.

### பெயர் அமைக்கும் முறை

புதன்,சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட ஆதிக்ககமான 14,23,32,41,50,59,77, 15,24,33,42,51,60,69, போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-5,6 யோகமான திகதிகள்-5,14,23,6,15,24,1,10,19,28, யோகமான மோதிரக்கல் ஜிர்கான், மரதகம் யோகமான நிறம் சாம்பல் நிறம், வெளிர்பச்சை;வெளிர் நீலம. ஆகாத நிறம் ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், ஆகாத திகதிகள்-3,12,21,30. உடல் எண் 5

### கூட்டு எண்ணாகிய உயிர எண்-7

5,14,23 போன்ற திகதிகளில் பிறந்து திகதி,மாதம்,வருடம் இம் மூன்றையும்கூட்டி வருகின்றகூட்டுஎண்ணாகிய உயிர எண7 வருமேயானால்இவர்கள புதன் கேது ஆதிக்கத்தில் பிறந்தவர்களாகவும், கண்ணியமிக் கவர்களாகவும் காட்சியளிப்பர். எப்போதும் எளிமையான ஆடையில் தூய்மையாகத் தோன்றுவர். சிறந்த சிந்தனா சக்தி படைத்த இவர்களுக்கு தனிமையில் கற்பனைகள் தோன்றிய வண்ணமிருக் கும். எப்போதும் சுறுசுறுப்புடன் விளங்கும் இவர்கள் சில நேரங்களில் தனிமை யிலிருந்து வருந்துவர். தன் மனதில இருப்பதெல்லாம் வெளியிடாது மனம் புழுங்குவர்.

### நேர்மையை விரும்புபவர்.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங் கும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் உத்தியோகம் தொழில் போன்றவற்றால் உயர்ந்த இடம் வகிப்பர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமைந்து விட்டால் குழப்பம் மிகுந்த வாழ்க்கையில் சிக்கித்தவிப்பர். இதனால் இவர்கள் தம் பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயரை மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். இவர்களின் மனம் நேர் மையறற காரியங்களை வெறுப் பதால் எப்போதும் உண்மை யானவை களையே விரும்பும் கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்களுக்குப் புனித யாத்திரை செல்வதில் அதிக ஆர்வம் இருக்கும். தான் செய்கின்ற சிறு தவறைக்கூட தனிமையில் இருந்து எண்ணி வருந்துவ்ர். இவர்களுக்குப் பல்வேறு நண்பர்கள் இருப்பினும் எல்லோரிடமும் நிரந்தரமாகப் பழக்கம் வைத்துக்கொள்ள மாட்டார்.

இவரகளுடைய முன்கோபத்தைக் கண்டு எல்லோரும் அஞ்சி ஒதுங்கு வர். இவரகள் மனம் மலைப்பிரதேசங் களையும, நீர்த்தேக்கங்களையும், நீர் இதனால் சிலர் கவிஞர்களாகக் கூட மாறுவதுண்டு. எந்த ஒரு பொருளையும் பார்த்தவுடனே அதைப்பற்றி ஆராய்ச்சி யில் இறங்கிவிடுவர்.

தைரியசாலிகள் போல் காட்சியளிக் கும் இவர்கள் உள்ளூரப் பயந்தாங் கொளளி ஒவ்வொரு செயலும் ஆண்டவனால் நிர்ணயிக் கப்பட்டது. நாமென்ன செய்வது என்று சிலநேரங் களில் வேதாந்தம் பேசுவர். குறுக்குக் கேளவி கேட்பதலும், வேதாந்தம் பேசு வதிலும் அதிக நாட்டங்கொண்ட வராக இருப்பதினால் சிலருக்கு இவர்களைப் பார்த்தவுடன் வெறுப்பு ஏற்படும். ஆனால இவர்கள் பிறருக்கு தீங்கு நினைக் காதவர்கள். சமயோசி தமாகப பேசத் தெரியாதவர்கள். ஆனால் பெயர பொருத்தமானதாக அமைந்து விட்டால் ஏராளமான ஐசுவரியங் களைச் சம்பாதிப்பதோடு தன்னைச் சார்ந் தவர்களையும் உயர்ந்த நிலைக் குக் கொண்டு வரவும் பாடுபடுவர்.

**ஆர். ஐ.துரைமுருகர்**

### பிறருக்கு உதவுபவர்கள்.

சட்டம், சமயம், இலக்கியம், மொழி, இசை, நாட்டியம் போன்ற கலைகளில் அதிக நாட்ட முடையவர் களாதலால் இவைகளைப்பற்றி ஆராயவும் தொடங்குவர். அழகான வீடு கட்டு வதிலும் வீட்டைச்சுற்றித் தோட்டம் போடுவதலும், வீட்டைத் தூய்மையாக வைதது் கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் உளளவர்களாக இருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்ய முன்வருவர். ஆனால் இந்த உதவி யைச் செய்வதினால் எந்தச் சிக்கலி லும் மாட்டிக்கொள்ளுவோமா எனத் தன் மனதிற்குள்ளே குழம்பிக்கொள்வர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர் களுக்கு பெயர் பொருத்தமானதாக அமைந்துவிடுமேயானால் சோதனைக ளெல்லாம் குறைந்து பல வீரதீரச் செயல்களைச் செய்வர். சமுதாயத்தில் பெரிய மனிதர்களாக வாழ்வர்: ஆனால் பெயர் பொருத்தமினறி

(தொடர்ச்சி....

# பதவி வெற்றிடம்

## (UNHCR - Micro Project)

**யாழ்.செயலக யூ. என். எச். சி. ஆர். நுண்கருத்திட்டபிரிவில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.**

**1. உதவித்திட்ட அலுவலர் (வெளிக்களம்/ நிர்வாகம்) – (பதவி 02)**

a. ஆக்க குறைந்தது க. பொ. த. (உயர் தரம்) சித்தி
b. திட்டங்கள் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், முகாமை, நிர்வாகம் செய்தலில் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவம்
c. திட்ட அறிக்கைகள், கடிதங்கள், முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றை கணனியில் பொறிக்கும் தகைமை உடையவராய் இருந்தல் வேண்டும்.

**2. தொழில்நுட்ப உதவியாளர்–(பதவி 03)**

a. ஆகக் குறைந்தது க.பொ.த (சாதாரண தரம்) சித்தி
b. தேசிய தொழில்நுட்ப டிப்புளோமா அல்லது அதற்கு சமமான தகைமை
c. அரச/கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய அனுபவம், மதிப்பீட்டு, தொழில்நுட்ப அறிக்கை மற்றும் வேலை மேற்பார்வை போன்றவற்றில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம்.

**3. சமூகசேவை உதவியாளர்–(பதவி 03)**

a. ஆகக் குறைந்தது க.பொ.த (உயர்தரம்) சித்தி
b. சமூக அபிவிருத்தி திட்டவேலைகளில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம்
c. 35 வயதிற்கு உட்பட்டவர்.

**4. லிகிதர் / நிர்வாகம் / கணக்கு/ ஆவணப்படுத்தல் – (பதவி 03)**

a. ஆகக் குறைந்தது க.பொ.த (உயர்தரம்) சித்தி.
b. குறைந்தது 05 வருடம் அரச, கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய அனுபவம்
c. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கடிதத் தொடர்பு செய்யக் கூடிய ஆற்றல், கோவைகள், கணக்குப் பதிவேடுகள் பேணல், மற்றும் கணக்கு வைக்கும் முறைகளில் அனுபவம்

**5. சாரதி–(பதவி 01)**

a. அடிப்படை, கல்வித் தகைமை (குறைந்தது 8ம் தரம் சித்தி)
b. கனரக வாகனம் செலுத்தும் தகைமையுடன் சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல்

குறிப்பு 1. தொடக்கம் 4 வரையான பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில அறிவு உள்ளவராயும் கணனிக் கல்வித் தகைமை உள்ளவராயும் மோட்டார் வண்டி ஓட்டக் கூடியவராயும், சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்களாகவும் இருத்தல் அவசியம்.
உயர் தராதரம் உடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

*செ. பத்மநாதன்*
அரச அதிபர்
யாழ். செயலகம்

**சுயவிபரங்களுடன் விண்ணப்பங்கள் 15.01.2003 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.**

*அரச அதிபர்*
**யூ. என். எச். சி. ஆர்**
**(நுண்கருத்திட்டம்)**
**செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/5605)

# சிறுவர்களுக்கான போட்டிகள்-2003

**சிறுவர் பாதுகாப்பு யாழ். மாவட்டச் சிறுவர்களுக்கிடையே வலய மட்டத்தில் போட்டிகளினை நடாத்துவதாக உத்தேசித்துள்ளது.**

**போட்டிக்கான தலைப்புக்கள் மற்றும் விபரங்கள் வருமாறு:-**

- சமாதானத்தின் பின்பு சிறுவரின் பார்வையில் யாழ் மாவட்டம்.
- சமகாலக் கல்வித்திட்டத்தில் சிறுவர் எதிர்நோக்கும் சவால்களும், தீர்வுகளும்.
- மாறி வரும் நவீன உலகினது வேகத்துக்கு ஏற்ப யாழ் மாவட்டச் சிறுவர்கள் தயார் படுத்தப்படல்.

**மேற்படி தலைப்புக்களில்**
**கீழ்ப்பிரிவு (9வயது வரை)க்கு பேச்சு/பாட்டுப் போட்டிகளும்**
**மத்தியபிரிவு (10–14 வயது)க்கும்,**
**மேற்பிரிவு (15–18 வயது)க்கும் கவியரங்கம், கட்டுரைப் போட்டிகளும் நடாத்தப்பட்டு வெற்றியீட்டு பவர்களுக்கு பரிசிலும், சான்றிதழும் வழங்கப்படும்.**

**இவைதவிர விசேட திறமையுடையவர்களுக்கென பிரத்தியேகப் போட்டிகளும் உண்டு.**

**மேலதிக அனைத்து விபரங்களுக்கும், விண்ணப்ப் படிவங் களுக்கும் தங்கள் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் பயிற்சியாளருடன் தொடர்பு மேற்கொள்ளவும்.**

**சிறுவர் பாதுகாப்பு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.**

(5604)

## குருநகர் மீனவருக்கு

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் மீன் சந்தைப் பகுதியில் உள்ள கட்டட இடிபாடு கள் மற்றும் பற்றைகள் இன்று வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்க உறுப்பினர்களால் துப்புரவு செய் யப்படவுள்ளது.

இத் துப்பரவுப் பணியை மேற் கொள்ள குருநகர் கடற்றொழிலாளர் கள் அனை வரையும் இன்று காலை 8.30 மணிக்கு தவறாது வருகை தருமாறு வட மாகாண கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் கேட்டுள் ளார். (த-6,7)

**பிறந்ததிகதிக்கு..**

பொருத்தமின்றி இருக்குமேயானால், எவ்வளவு முன்னேற்றம் அடைந் தாலும்,ஒரு குழப்பவாதியாகவே வாழ் வர். இதனால் பெயர் பொருத்தமா னதாக அமைய வேண்டியது. அவசியம்.

### *தொழில்*

எழுத்தாலும், பேச்சாலும் பொருளீட்டுவர். கமிஷன், கண்டராக்ட், ஏஜென்ஸீஸ், வாகனம், மெற்றல், இரும்பு போன்றவைகளினாலும் முன்னேற்றம் அடையும் பாக்கியம் உண்டு. பச்சை நிறப் பொருட்களும் இவர்களுக்கு நற்பலனைத் தரக்கூடியவை களே.

### *நோய்*

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு மனக்குழப்பம் வாயு சம்பந்தப்பட் கோளாறுகள் கண் காது போன்ற நோய்கள் வ்ந்து நீங்கும்.

### *பெயர் அமைக்கும் முறை*

புதன், கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு புதன், சுக்கிரன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77, 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும்.

### *பின்பற்றவேண்டியவை*

யோகமான எண்- 5, 2, 6 யோகமான திகதிகள்- 5, 14, 23, 2, 11, 20, 29, 6, 15, 24 யோகமான மோதிரக்கல்- வைரம், ஜீகான் யோகமான நிறம்- சாம்பல் நிறம், பச்சை, வெளிர் நீலம், வெளிர் மஞ்சள், ஆகாத நிறம்- சிவப்பு மட்டும். ஆகாத திகதிகள்- 9, 18, 27

*(தொடரும்....)*

# $1\frac{3}{4}$ கிலோ தங்கநகைகளுடன் பெண்கள் இருவர் முகமாலையில் கைது

(உடுவில்)

ஒன்றே முக்கால் கிலோகிராம் நிறையுடைய தங்க நகைகளை முக மாலைச் சோதனைச் சாவடியூடாக கொணடுவர முற்பட்டோர் சந்தேகத் தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம பெற்ற இச் சம்பவத்தில் வவுனியா பம்பைமடுவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகளும் அவர்களது கணவன மாரும் சேர்ந்து ஒன்றே முக்கால் கிலோகிராம் நிறையுடைய தங்க நகைகளை சங்கானையிலுள்ள உற வினர் வீட்டிற்கு கொண்டுவர முற் பட்டனர், இதன் போது முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட் டனர்.இவர்கள் தற்போது யாழ்ப்பா ணம் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள தமது நண்ப ரொருவர் தம்மிடம் அந்த தங்க நகை களை கொடுத்ததாக அவர்கள் கூறி யதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(த-261)

# பிரான்ஸ் தூதுவருடன் ஈ.பி.டி.பியினர் சந்திப்பு


(யாழ்ப்பாணம்)

வடக்குக கிழக்கு மாகாணத்தில் அடிப்படை மனித உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதோடு அரசியல் கட் சிகள் தொழிற்படும் பன்மைத்துவ சூழலும், அடிப்படை மனிதவுரிமை களும் பேணப்பட வேண்டும். இதற்கு பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் கே.என் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழுவினர், கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளை நேற்று நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அச் சந்திப்புத் தொடர்பாக ஈ.பி.டி.பியினர் செய்திக குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்கமும், தமிழீழவிடுதலைப் புலிகளும் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் அதன் ஊடாக ஸ்திரமான அரசியல் நிலை ஏற்படுத்தப்படுவது அவசியம் அத்துடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான, கௌரவமான தீர்வு எட்டப்பட்டு அது சுமுகமாக அமுல் படுத்தப்படும் வரை பிரான்ஸ் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள், அரசியல் தஞ்சம்கோரி நிராகரிக் கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ள முன்வர வேண்டும் எனவும் வலி யுறுத்திக் கேட்டுக கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# மறைந்தும் மறையாத மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும

*தரணியெங்கும் தவிக்கும் தமிழர்தம் உரிமைக்குரலை கர்ச்சித்த மறத்தமிழனை நன்றி மறவாமல் நினைவு கூருவோமாக.*

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : மாலை 3.30 மணி**

## நிகழ்ச்சி நிரல்

**மலரஞ்சலி :**

**வரவேற்புரை** : திரு. அ. விநாயகமூர்த்தி
(யாழ்.மாட்ட பாராளுமன்ற உறுப்பினர், தலைவர் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்)

**தலைமையுரை** : திரு. கனகசபை சிவானந்தமூர்த்தி
(சிரேஷ்ட விரிவுரையாளர். யாழ் பல்கலைக்கழகம்)

**கௌரவ அதிதிகள் உரை** : 1. சிவசிறி சோ.தண்டபாணி தேசிக ஐயர்
(ஜே.பி. பிரதம குருக்கள், ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை).
2. அருட்தந்தை J.P.E. செல்வராசா
(குரு முதல்வர், யாழ்.மாவட்டம்)

**நினைவுப் பேருரை** : திரு. V.T. தமிழ்மாறன்
(தலைவர், சட்டத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்)

**நினைவாஞ்சலி உரைகள :**
1. திரு. சி.வீ.கே.சிவஞானம்
(முன்னாள் யாழ.மாநகரசபை ஆணையாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், – யாழ்மாவட்ட அமைப்பாளர்)
2. திரு. K.T. கணேஷலிங்கம்
(விரிவுரையாளர், அரசறிவியல், சமூகவியல்துறை யாழ். பல்கலைக்கழகம்)
3. திரு. ஆர். ஈ. ஆனந்தராஜா
(உபதலைவர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
4. கலாநிதி S. சிவலிங்கராசா
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
5. திரு. சதா சண்முகநாதன்,
(தலைவர் திருமலை மாவட்டம் அ.இ.த.காங்கிரஸ்)

**மூன்றாம் ஆண்டு நினைவு மலர் வெளியீடு** : திரு. க. மு. தர்மராசா
(பொருளாளர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

**நன்றியுரை** : திரு. தி. மகேந்திரராசா (பொதுச்செயலாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

மாமனிதர் குமார் பொன்னம்பலம் கடைசியாக கனடாவில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி ஆற்றிய உரை, ஒளிப்பதிவு நாடா மூலம் காண்பிக்கப்படும்.

**தமிழ் பேசும் இனத்திற்காக இறுதி மூச்சுவரை போராடி, இறுதியில் தன்னுயிரையே தியாகம் செய்த தீந்தமிழனுக்கு, எமது நன்றிக் கடனைச் செலுத்த அனைவரும் திரண்டுவந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*– மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு*

(6420)

# இன்று ஒரு தகவல்

## அலுவலக அரட்டைகள்

வெகுநாட்களுக்குப் பின்னர் ஒரு நண்பரைப் பார்த்தேன். உங்களுடன் 'உட்கார்ந்து கொஞ்ச நேரம் அரட்டை அடிக்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது' என்று சொன்னேன். 'அப்படியென்றால் நேரடியாக எங்கள் அலுவலகத்துக்கு வந்து விடுங்கள்... அதுதான் வசதி' என்றார். இப்படி, அரட்டை அடிப்பதற்கு அலுவலகம் தான் வசதியான இடம் என்று நினைக்கிறவர்கள் பலருண்டு. அவர்களுக்கெல்லாம் கூடிய சீக்கிரத்தில் ஓர் இடைஞ்சல் வந்து சேரும் போல் இருக்கின்றது.

கைக்கு அடக்கமாகப் பிஸ்கட்வடிவத்திலே இரண்டு அங்குல அகலத்தில் சதுர வடிவத்திலே ஒரு கருவிதயார் பண்ணியிருக்கிறார்களாம். இது அரட்டை அடிக்கிறவர்களைக்கண்டுபிடித்துவிடுமாம். இன்பிறாறெட் றேய்ஸ் என்று சொல்லப்படும் அகச்சிவப்புக் கதிர்களினால் அது இயங்குகின்றது. அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களுடைய சீருடையில் இந்தக் கருவியைப் பொருத்தி விட வேண்டியது'

அல்லது பையில்வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவருடைய கருவிக்கும் ஒவ்வொரு இலக்கம் உண்டு. ஒவ்வொன்றும் வேறு வேறு சமிக்ஞைகளை அனுப்பும். இதைஒருகம்ப்யூட்டர் பதிவு பண்ணிக்கொள்ளும். அந்த ஊழியர் எங்குபோனாலும் அதை இது பதிவு பண்ணிக் கொண்டேவரும். விறாந்தையில் இருக்கிறாரா? கன்டீனில் இருக்கிறாரா? பாத் ரூமில் இருக்கிறாரா? என்றெல்லாம் பதிவாகிவிடும்.

பலஊழியர்கள் ஒரேஇடத்தில் கூடி... கும்பலாக இருந்தாலும் சரி... அலுவலகத்துக்குள்ளேயே யாரும்போகக் கூடாத முக்கியமான இடத்திற்கு ஒருவர் இரகசியமாகப் போனாலும் சரி-- கம்ப்யூட்டர்காட்டிக்கொடுத்து விடும். மேல் நாடுகளில் இப்பொழுதுஇதனைப்பயன்படுத்துகிறார்களாம். இந்தக் கருவியை அணிந்திருக்கிறவர் தனக்குரிய இருக்கையில் அமர்ந்தவுடன் அவர் மேசையில் இருக்கிற கம்ப்யூட்டர் அவருடைய வருகையைப் பதிவுபண்ணிக்கொள்ளும்.

சரி... இந்தக் கருவியை யாருக்கும் தெரியாமல் வெளியே எடுத்து வைத்து விட்டு, ஏமாற்றி விடலாம் என்று நினைத்தாலும், அதுவும் முடியாது. நமது ஊருக்கு இந்தக் கருவி வந்தால் நல்லது தான், அலுவலகத்தில் வேலை செய்யாமல் மற்றவர்களுடைய அறைக்குப் போய் அரட்டை அடிப்பது, இரகசியக் கோப்புக்கள் வைத்திருக்கின்ற அறைக்குள் போய் நோட்டம் பார்ப்பது. என்பவற்றையெல்லாம் கட்டுப்படுத்தி விடலாம்.

சிலர் வேண்டுமென்றே வேலை நேரம் பார்த்துப் பாத்ரூம் எங்கேயிருக்கிறது என்று தேடிப் போய் விடுவது உண்டு. அவர்களையெல்லாம் இது சுலபமாக கண்டு பிடித்துச் சொல்லி விடும். இந்தக் கருவியால் வேறு சில நன்மைகளும் உண்டு ஒரு பெரிய அதிகாரியின் அறைக்குள் குறிப்பிட்ட சிலர் தான் நுழையலாம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குத் தகுந்த மாதிரி ஏற்பாடு செய்து வைத்துக் கொள்ளலாம். அப்படி வைத்து விட்டால் அந்தக் குறிப்பிட்ட சிலர் தான் அந்தக் கதவைத் திறக்க முடியும்.

அதே போன்றுபணம், நகை போன்ற விலையுயர்ந்த பொருள்கள் இருக்கிறஅறைக்குள் குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே போய்விட்டு வருகிற மாதிரிப் பண்ணிவிடலாம் இப்பொழுது பிரிட்டனில் பல இடங்களில் இந்தக்கருவியைச் சோதனை முறையில் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்களாம், வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஆபத்து வேளைகளில் உதவி செய்வதற்கும் இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம்.

இப்பொழுது அலுவலகங்களில் வேலை செய்கிறவர்கள் எவ்வளவு விழிப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள் தெரியுமா? அன்றைக்கு அப்படித்தான் சார். ஓர் அலுவலகத்தில் நண்பரைப் பார்த்து இன்றைக்கு என்ன திகதி சார் என்றேன். சரியாக ஞாபகமில்லை என்றார் அது தான் கையில் நியூஸ் பேப்பர் வைத்திருக்கிறீர்களே அதைப் பார்த்தால் தெரியுமே! என்றேன் அது' 'அது எப்படிச் சார் தெரியும்' இது' நேற்றைய பேப்பர்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கை மோட்டார் வண்டி அடுத்தமாதம் விற்பனைக்கு

(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிறிய மோட்டார் வண்டிகளின் பரீட்சார்த்த ஓட்டம் இத்தாலியில் நடைபெறவுள்ளது.

இத்தாலிய மோட்டார் வாகன நிபுணர்கள் இந்த மோட்டார் வண்டியை மேலும் அபிவிருத்திசெய்வது தொடர்பான முக்கிய ஆலோசனைகளை இலங்கை மோட்டார் வாகன நிபுணர்களுக்கு வழங்கவுள்ளனர்.

இதேவேளை, இதனைத் தயாரிக்கும் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி லோறன்ஸ்பெரேரா இதுபற்றி கருத்து வெளியிடுகையில்.

அடுத்தமாதமளவில் இம் மோட்டார்வண்டி விற்பனைக்கு விடப்படும் என்றார்.

அத்துடன், அடுத்தவருடமளவில் சிறியரக மோட்டார் வாகனங்களையும் ஜீப் வண்டிகளையும் சந்தைப்படுத்தவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளதாக அதிகாரி மேலும்தெரிவித்தார். (உ-10)

## வாகன விபத்தில் 7 படையினர் படுகாயம்

(அநுராதபுரம்)

இராணுவ வாகனமும் பயணிகள் வாகனமும் விபத்திற்குள்ளானதில் 7இராணுவத்தினர் படுகாயம் அடைந்து குருநாகல் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பயணிகள் பஸ்ஸில் பயணஞ் செய்தவர்கள் காயம்எதுவுமின்றிஉயிர் தப்பினார்கள்.

இச்சம்பவம்கடந்தவியாழக்கிழமை காலை குருநாகல்வீதியில இடம் பெற்றது. (ம)

# புலிகள் கூறுவதற்கெல்லாம் பிரதமர் ரணில் தலையாட்டுகிறார்

## தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியில் யுத்தம் நடைபெறவிட்டாலும் நாடு பொருளாதார ரீதியில் பாரிய அழிவுகளை எதிர்நோக்கி வருகிறது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும், பாரளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்றஊடகவியலாளர் மாநாட்டில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் தொடர்ந்தும் பேசுகையில்;

தமிழீழ விடுதலைப்புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சமாதானம் என்ற போர்வையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது படையணிகளை பலப்படுத்துவதிலும், பாரிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைப் புரிந்து கொள்ளாத பிரதமர், அவர்களின் விருப்பு வெறுப்புக்கமைய செயற்பட்டுவருகிறார் என குற்றம் சாட்டியுள்ளார். (உ-8)

## கையடக்க தொ. பே. பாவனையாளர்களுக்கு மேலும் சலுகைகள்

(கொழும்பு)

கையடக்கத் தொலை பேசிகளுக்கு உள்வரும் அழைப்புகள் இலவசம் என்ற இம் மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ள திட்டம் மூலம் பலர் நன்மை அடைவார்கள் என்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இத்திட்டத்திற்கு கையடக்க தொலைபேசி நிறுவனங்கள் யாவும் இணங்கியுள்ளன.

எனவே, இத்திட்டத்தினால் கையடக்கத் தொலை பேசி பாவனையாளர்களும் மற்றும் தூர இடங்களில் உள்ள சாதாரண தொலை பேசி வசதியற்றவர்களும் பெரும் நன்மை அடைவார்கள் என்றார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு, இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் முதலாவது கட்டத்தில் கையடக்க தொலை பேசியில் உள்வரும் அழைப்புக்கள் இலவசமாக்கப்படவுள்ளன,

இரண்டாவது கட்டத்தில் சாதாரண தொலை பேசிகளில் இருந்து மேற்கொள்ளப்படும் கையடக்க தொலை பேசிகளுக்கான அழைப்புகளும் இலவசமாக்கப்படும் என தெரிவித்துள்ளது. (உ-10)

## மகளிர் நிர்வாகம் தெரிவு

(ஊர்காவற்றுறை)

வேலணை துறையூர் சனசமூக நிலையத்தின் மகளிர் பிரிவுக்கான நிர்வாகத்தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவராக தி. உஷாநந்தினி, செயலாளராக கி. விஜயராணி, பொருளாளராக தி. கோமதி ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## கரம்போட்டி

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம்புதுவருடத்தைமுன்னிட்டு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கபணிமனையில் 15 வயதுக்கு உட்பட்டவர்களிடையே கரம்போட்டி ஒன்றினை நடாத்தியது

ஒற்றையர் ஆட்டத்தில் மரடோனாமன்னன் முதலாம் இடத்தையும் எம். மலரவன் இரண்டாம் இடத்தையும். பெற்றனர்.

இரட்டையர் ஆட்டத்தில் எம். வினோசுதன், எம். மலரவன் சோடிகள் முதலாம் இடத்தையும் மரடோனாமன்னன், சுஜீவன்சோடிகள்இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

இப்போட்டிகளுக்குதீர்ப்பாளர்களாக கப்ரின் டி ஏ.எம். குணசிங்கம், ரி. முத்துலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

## நினைவு மண்டபத் திறப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சில் பலியான சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் எஸ். நமசிவாயம் நினைவு மண்டபத்தின் திறப்பு விழா நாளை 6 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது.

கைத்தொழில் மன்றத் தலைவர் பி. என். சற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில், நினைவு மண்டபத்தினை திருமதி நமசிவாயம் திறந்து வைப்பார். (உ-77)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாயப் பீடபுகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல்கருத்தரங்கு எதிர்வரும் 06 ம் 07 ம் திகதிகளில் மேற்படி விவசாய பீடத்தில் இடம்பெற உள்ளது.

விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட கல்விமான்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## தாக்குதல் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியால்சைக்கிளில் சென்றவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் பாதிக்கப்பட்ட நபர் படுகாயத்துடன் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் சங்கானையில் அண்மையில் இடம்பெற்றது.

தப்பு துரைராசா (வயது. 43) என்பவரே படுகாயத்துடன் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவத்திற்கான காரணம் குறித்த தகவல் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (க-7-6)

## தண்டேஸ் கழக அணி வெற்றிவாகை சூடியது

(சுண்டுக்குளி)

பாசையூர் புனிதஅந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் மக்கள்படை விளையாட்டுக்கழகம் அமரர் வீரக்கோன் ஞாபகார்த்தமாக நடத்திவந்த உதைபந்தாட்டப் போட்டி தொடரின் இறுதிஆட்டங்களும் பரிசளிப்புவைபவமும் புனித அந்தோனியார் விளையாட்டுமைதானத்தில் இடம் பெற்றது.

முதலில் இடம்பெற்றகாட்சி உதைபந்தாட்டத்தில் அந்தோனியார் விளையாட்டு கழக நிர்வாகஉறுப்பினர்கள் அணி மக்கள்படை அணியினரை 1:0 என்ற கோல்கணக்கில் வென்றது.

அதனைத்தொடர்ந்துஇடம்பெற்ற இறுதிஆட்டத்தில் தண்டேஸ்கழகஅணி அதனை எதிர்த்துஆடிய ஸ்ரீபன்ராஜ் கழகஅணியை பலத்தபோட்டியின்பின் 2:1என்றகோல்கணக்கில் வெற்றியீட்டி வெற்றிக்கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டித்தொடரில் சிறந்த விளையாட்டு வீரர்களாக ஸ்ரீபன்ராஜ்கழக அன்ரன்குட்டி தண்டேஸ்அணியைச்சேர்ந்த ஏ றொசான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றஅணி வீரர்களுக்கு தங்கப்பதக்கங்களும் அணிக்கு ரூபா 5000ம், வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டன.

இரண்டாம் இடத்தை பெற்ற அணியின்வீரர்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும் பணப்பரிசாக ரூபா 3'000 ம் வழங்கப்பட்டன. (உ-110)

## வைரஸ் காய்ச்சலுக்கு 11 பேர் இதுவரை பலி

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் கடந்த இரு மாதங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ் வைரஸ் காய்ச்சலினால் குறிப்பிட்ட தொருகால எல்லையில் 33 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சப்பிரமுவ மாகாண சுகாதார திணைக்கள தொற்று நோய் நிபுணர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் கடும் காய்ச்சல் தலைவலி மற்றும் மயக்க நிலை போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

சில மிருகங்கள் மற்றும் பறவைகள் மூலமே இரத்தினபுரி மாவட்டத்தில் இவ் வைரஸ் நோய்பரவுவதாகதற்போது மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-8)

### கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

சமுர்த்தி சங்கம் அமைப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

நவாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பிரசாத் வீதியைச் சேர்ந்த அனைத்து சமுர்த்திசிறுகுழுக்களுக்குமான முக்கிய கலந்துரையாடலும் சமுர்த்தி சங்கம் அமைக்கும் நிகழ்வும் மேற்படி தினத்தில் கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற இருப்பதால் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளும்படி அப்பகுதிசமுர்த்திஅபிவிருத்தி அலுவலர் கே. புகிலசிறி தெரிவித்துள்ளார்.

(பி)

# வைரஸ் காய்ச்சலிலிருந்து தப்பிக் கொள்ளும் வழிகள்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்.குடாநாட்டில், பரவுகின்ற காய்ச்சல் தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பொது மக்கள் தெரிந்து கொள்ளும் விதத்தில் விரிவாக அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அதன் விபரம் வருமாறு;

தற்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் 60 சதவீதமானோர் காய்ச்சல் வரும்நோயாளிகளாக உள்ளார்கள், இவர்களில் 65சதவீதமானோர் இனம் காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். 15 சத வீதமானோர் நெருப்புக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இனம்காணப்படாதவைரஸ் காய்ச்சலினால்கூடுதாக இளம் வயதினர் அதிலும் பெண்களே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என அவதானிக்கப்பட்டுள்ளது.

விழிப் புணர்வுடன் பின்வரும் நடவடிக்கைகளைக் கடைப்பிடித்துமேற் படிகாய்ச்சல்கள் தொற்றுவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், தம்மையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

- இக் காய்ச்சல் சுவாசத் தொற்று மூலம் தொற்றுவதாகக் கருதப்படுகிறது. எனவே வீட்டில் காய்ச்சல் உள்ளவர்களை தனிமைப்படுத்தல் வேண்டும்.
- சன நெருக்கம் கூடும் இடங்களுக்கு அவசியமற்றுச் செல்வதைத்தவிர்த்துக்கொள்ளல் நன்று.
- காய்ச்சலால்ஏற்படும் பாதிப்பைத்தவிர்க்க அண்மையிலுள்ள அரசவைத்தியசாலைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ளுதல்.
- மருந்தினால் கட்டுப் படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

**டெங்கு காய்ச்சல்:-**

டெங்கு காய்ச்சலும் வைரசினால் ஏற்படுகின்றது. இக் காய்ச்சலும் ஒரு தீவிர காய்ச்சலாகும்.

யாழ். மாவட்டத்தில் டெங்குவைப் பரப்பும் நுளம்பு இனம் காணப்படுகின்றமையால், டெங்கு நோயாளியிலிருந்து டெங்கு காய்ச்சல் நுளம்புக்கடி மூலம் பரவுகின்ற நிலை உண்டு.

நுளம்பு பெருகும் இடங்களை இல்லாது அழித்தல் வேண்டும்.

வீசப்பட்ட சிறு கொள்கலங்களில் தேங்கும் நீர், எறியப்பட்ட பொலித்தீன் பைகள், வீசப்பட்ட ரயர்கள் போன்றவை.

கழிவு நீர் வடிகால்கள், நீர் சேகரிக்கும் திறந்த கொள்கலன்கள், நீர்த்தாங்கிகள் ஆகியவற்றை ஐந்து நாட்களுக்கு ஒரு முறையாவது முழுமையாக வெளியேற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

பீலிகளில் நீர், சருகுகள் தேங்கி நிற்பதை இல்லாது சுத்தப்படுத்த வேண்டும்.

நுளம்புக்கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு தங்கி நிற்கக்கூடிய பற்றைகள், புல் செடிகளை அழித்தல், அத்துடன் புகை யூட்டல், நுளம்பு வலை, நுளம்புச்சுருள், புல் எண்ணெய் பாவித்தல் மூலம் தடுக்கலாம்.

டெங்கு காய்ச்சல் எனக் கருதப்பட்டால் காய்ச்சல் நின்ற பின்னர் சில நாட்களுக்கு தொடர்ந்து பூரண ஓய்வும், ஆபத்தான பின் விளைவுக்கான கண்காணிப்புக்களும் தேவை.

**நெருப்புக் காய்ச்சல்:-**

தற்பொழுது பரவும் நெருப்புக் காய்ச்சல் இதுவரை பாவிக்கப்பட்டமருந்துகளுக்கு கட்டுப்பாடாத நிலை ஏற்பட்டுள்ளது.

நெருப்புக்காய்ச்சல் ஏற்படாமல் தவிர்ப்பதற்குபின் வரும் நடவடிக்கைகள் அவசியமாகும்.

தற்போதைய மழை வெள்ளம் காரணமாக நீர் நிலைகள் மாசு அடைந்து காணப்படுவதனால் கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.

கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வீட்டில் சமைத்த உணவுகளை மட்டும் உண்ணுங்கள்.

- வெளியிடங்களிலும் திறந்து வைக்கப்பட்டுள்ள உணவு வகைகளையும் உண்ணாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- பழங்களை உண்ண முன்னர் பாதுகாப்பான நீரில் நன்றாக கழுவி உண்ணுங்கள்.
- கீரை வகைகள், காய் கறி, கடை உணவு உட்படஏனைய உணவுகளையும் நன்றாக சமைத்து உண்ணுங்கள்.
- பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைக்கு கொண்டு செல்வதற்குவீட்டில் இருந்தே கொதித்தாறிய நீர், உணவுகளைக் கொடுத்துவிடுங்கள்.
- மலசலங் கழிப்பதற்கு எப்போதும் மலசல கூடத்தையே பாவியுங்கள். அத்துடன் மலசல கூடம் எப்பொழுதும் சுகாதாரமான நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- மலங்கழித்த பின்பும், உணவு உண்ணுமுன்பும், சமைக்க முன்பும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுங்கள். (பி)

## உற்சவம்

வண்ணார்பண்ணை கொண்டலடிவிநாயகர் ஆலய வருடாந்த சாந்திக அலங்கார உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (உ-111)

## நீர்வசதிஇல்லை; காரைநகர் கமக்காரர் கவலை

(காரைநகர்)

நெற் செய்கைக்கு வேண்டிய நீர் வசதி இல்லாதிருப்பதாக காரைநகர் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெள்ள நீரைத் தேக்கும் வசதிகள் சரிவர செய்யப்படாமையினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது இதேவேளை இனி வரும் நாட்களில்மழைபெய்யாதுபோனால் தமது முயற்சிகள் வீணாகிவிடும் எனவும் சம்பந்தப்பட்டவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-246)

### நெல்லியடிச் சம்பவம்

## ம.உ. ஆ.கு. அலுவலகத்தில் பொலிஸார் வாக்குமூலம்

(திருநெல்வேலி)

கடந்த 10 ஆம் திகதி நெல்லியடியில் இடம்பெற்றபொது மக்கள்மீதான துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பாக பொலிஸ் தரப்பினர் கடந்த வியாழக்கிழமை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் வாக்குமூலம்அளித்தனர்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. எம். பிரேமரட்ணா எஸ். பி. கொட்டதர்மசேன ஆகியோரின் வாக்குமூலங்களே கடந்த வியாழக்கிழமை பதிவு செய்யப்பட்டன.

பொதுமக்கள், மற்றும்செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எஸ். பி. கொட்டதர்மசேன தலைமையில் விசாரணைக்குழு அமைக்கப்படவுள்ளதாகவும் செய்தியாளர் தம்மை அடையாளம் காட்டவில்லைஎனவும் இவ் வாக்குமூலத்தில் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிசாரை நோக்கி கிரனைட்தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்தே பொலிசார் றபர்குண்டுகளை வீசியதாகவும் பொலிசார் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட மனிதஉரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி ருவான்சந்திரசேகர, பொதுமக்களிற்கு ஏற்பட்ட இழப்பீடுகள் தொடர்பாகவும் செய்தியாளர் தாக்கப்பட்டமை செய்தியாளரின் புகைப்படக்கருவி ஒலிப்பதிவுக்கருவி என்பனவற்றை பொலிசார் மீள ஒப்படைக்காமைபற்றியும் தான் பொறுப்பதிகாரி ஏ. எஸ். பி. ஜனகுணதிலகாவை மனிதஉரிமைஆணைக்குழு அலுவலகத்திற்கு அழைத்து விசாரணைக்கு உட்படுத்தப்போவதாக தெரிவித்தார். (உ-43,7)

## ஹற்றன் நசனல் வங்கி 670 விவசாயிகளுக்கு சுமார் 1.7கோடி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நாசனல் வங்கி, கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டில் உள்ள 7சமநல சேவை நிலையங்கள் ஊடாக 1 கோடி 72 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவை விவசாயக் கடனாக வழங்கியுள்ளது.

சாவகச்சேரி, தீவகம், கீரிமலை, புலோலி, புத்தூர், உடுவில்உரும்பிராய் கமநலசேவை நிலையங்களைச் சேர்ந்த 670 விவசாயிகள் இக்கடனுதவியைப் பெற்றுள்ளனர். (உ-7)

### காக்கை தீவு கடற்றொழிலாளர்

## இயந்திரப் படகில் மீன்பிடிக்க அனுமதி

காக்கைதீவு கடற்றொழிலாளர்கள் இயந்திரப்படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கு இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காக்கைதீவு, அராலி, நாவாந்துறை, நவாலி ஆகிய பகுதிகளிலிருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் முதல்அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுபாஸ் ஹோட்டலில் அனைத்து கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இயந்திரப்படகில் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்பட்ட போதும் பாஸ் நடைமுறை அமுலில் இருக்குமென படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 வருடங்களின் பின்னர் இப்பிரதேச மீனவர்கள் இயந்திரப்படகு மூலம் கடற்றொழிலுக்கு செல்வதுஇதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (பி-201)

# கண்ணிவெடி அகற்றும் பணி இவ்வாண்டு முதல் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு கண்ணிவெடி, மிதிவெடிகள் அகற்றும் பணிகள் விஸ்தரிக்கப்படுவதுடன் விரைவு படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வகையில், யாழ். மாவட்டம்பல்வேறுபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப் பணி இடம்பெறவுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வோர் நிறுவனம் பொறுப்பாகச் செயற்படவுள்ளது.

இந்தச் சேவைகளை யாற்ற சர்வோதயம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சேவ், ஹலோ ரெஸ்ற் நிறுவனங்கள் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறைந்தளவு ஆளணியுடன் இடம்பெற்ற இந்தச் சேவை இவ்வாண்டு முதல் அதிகளவான ஆளணியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

வெளிநாடுகளின் உதவியுடன் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றும் பயிற்சி இளைஞர்கள் பலருக்கு இங்கு வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இது இவ்விதமிருக்க, இப்பணிக்கு யுனிசெவ், யு.என்.டி.பி ஆகிய அமைப்புகள் அனுசரணை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பொங்குதமிழ் ஒருவருடம் நிறைவுதினம்

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ் எழுச்சிநிகழ்வின் ஒருவருட நிறைவுதினம் எதிர்வரும் 17ந் திகதி யாகும்.

யாழ். பல்கலைக் கழக சமூகத்தின் வழிகாட்டலில், இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராக, குடாநாட்டு மக்கள் அப்போது கிளர்ந்தெழுந்தனர்.

அதன் ஒருவருட நிறைவு தின நிகழ்வு எதிர்வரும் 17 ந் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இதனை ஒட்டி யாழ். பல்கலைக்கழகபொதுகேட்போர் கூடத்தில் இன்று முதல் எதிர்வரும் 16ந் திகதிவரை தினமும் மாலை5 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளோரை இதில் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-7)

### புதிய அரச- ஊழியரின் சம்பளத்தில்

## பணம் கழிப்பதை எதிர்த்து கையெழுத்துப் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கசேவையில் புதிதாகச் சேர்பவர்களுக்கு அவர்களின் சம்பளத்திலேயே ஓய்வூதியத்திற்கான பணம் கழித்தெடுக்கப்படுவதற்கெதிரான கையெழுத்துப் போராட்டமொன்றினை அகில இலங்கை ரயில்வே தொழிலாளர் சம்மேளனம் நாளை திங்களன்று ஆரம்பிக்கவிருக்கிறது.

மருதானையிலுள்ளரயில்வே திணைக்களத் தலைமை செயலகத்தில் வைத்தும், இரத்மலானையிலுள்ள தொழில் நுட்பப்பிரிவிலும் கையொப்பம் பெறும் போராட்டம் ஆரம்பிக்கும்.

இது பற்றி சம்மேளனத்தின் செயலாளர்சுமதிபால கூறுகையில்; இவ்வாண்டு ஜனவரியிலிருந்து அரசசேவையில் இணைந்து கொள்பவர்களுக்கு முன்னைய முறைப்படியன்றி, அவர்களின் சம்பளத்திலேயே அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய ஓய்வூதியத்திற்கான பணம் கழிக்கப்படவுள்ளது இதற்கான சட்ட மூலம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுவிட்டது. இதன்படி இனிமேல் அரசசேவையில் இணைபவர்களுக்கு இலவச ஓய்வூதியம் இருக்காது, அவர்கள் ஓய்வு பெறும் போது சேமலாப நிதி போல ஒரு தொகைப்பணமே வழங்கப்படவிருக்கிறது, இது அரச ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கெதிரான பாரபட்சமாகும்.

புதிய சட்ட மூலத்திற்கெதிராக அகில இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம்உச்ச நீதிமன்றத்தில் அடிப்படையுரிமை மீறல் மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளது தெரிந்ததே. (பி)து

### பன்றிகள் அட்டகாசம்

(தென்மராட்சி)

நாவற்குளி கிராம சேவையாளர் பிரிவில் பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள வயல்களில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களை பன்றிகள் தினமும் சேதப்படுத்திவருகின்றன. (உ-77)

# பேரின்பத்துக்கு இட்டுச் செல்லும் வாழ்வை நாடு; இறைவனின் துணையும், அருளும் நிறைவாக வரும்

## பரமபிதா காட்டிய பாதை



தெய்வீகக் குழந்தையாம் இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடி, புத்தாண்டின் மகிழ்வில் திளைத்திருக்கும் நாம், நீண்ட காலத்தின் பின்னர் மகிழ்வான நினைவுகளுடன் புத்தாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். எம் எண்ணங்கள் தூய்மை நிறைந்ததாகவும். எதிர்பார்ப்புகள் நியாயமுள்ளவையாகவும் அமையும் போது புத்தாண்டு தரும் வாழ்வு பயனுள்ளதாக இருக்கும். தெய்வீக ஒளி நோக்கி கீழ்த்திசைஞானிகள் வந்து பணிந்து திருக்காட்சியின் ஒளி பெற்றுச் சென்றார்கள், ஒளியை வெறுத்தான் அந்நாட்டு அதிபதியான ஏரோது, ஒரு புறம் நன்மையின் சுவடுகள் பதிக்கப்படுகின்ற போது, மறுபுறம் தீமையின் சுவடுகளும் பின் தொடருகின்றன; இது உலகின் நியதியாகக் காணப்படுகின்றது.

### சமாதான வாழ்வு

கிறிஸ்துவின் பிறப்பானது அனைத்து மக்களுக்கும் சமாதான நற்செய்தியைக் கொண்டுவந்தது 'நற்செய்தியின் வழியாகப் பிற இனத்தவரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் (எபே:3:6) என்று புனித பவுல் தமது திருமுகத்தின் மூலம் குறிப்பிடுகின்றார். எம் நாடும், எம்மக்களும் சமாதானத்தை ஆசிக்கின்றார்கள். அதுவும் நீதியுடன் கூடிய சமாதானத்தை; எனவே அச் சமாதான வாழ்வாவது எம்மிடையே வளர வேண்டுமென்றால் எம் ஒவ்வொருவரின் பங்களிப்புகளும்

அமல அருள்தாசன்

முக்கியமானவை. நாம் ஒருவரோடு ஒருவர் சமாதானம் உள்ளவர்களாக வாழ முற்பட வேண்டும்.

### பொறாமை

யாரும் எம் அகத்துள்ள அமைதியை பறித்து விட முடியாது. நாம்தான் எம்மிடையே உள்ள அமைதியைத் தொலைத்து விடுகின்றோம். எம்மை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. அதனாலே மற்றவர்களையும் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாமலும், அவர்களின் செயற்பாடுகளைப் பொறுக்கமுடியாமலும் இருக்கின்றது. நாம் ஒரு நாளுக்கு எத்தனை தடவைகள் எம் பிழைகளை மறந்து, மற்றவர்களின் வாழ்க்கையிலே குறுக்கிடுகின்றோம், மற்றவரைப் பற்றிக் குறை கூறாவிட்டால் எமக்கு பொழுதே விடியாது. மாறாக நாம் எத்தனை பேரின் நன்மைத் தனங்களைப் பாராட்டுகின்றோம். அதற்காக மகிழ்கின்றோம் இல்லை; அவர்கள் மேல் பொறாமை கொண்டு அவரைத் தொலைத்துவிடக் கணக் கட்டுகின்றோம் இவை போன்ற வற்றினாலே எம் உளத்திலே மகிழ்ச்சி இல்லை அமைதியில்லை, சமாதானம் இல்லை நாமும் குழந்தை இயேசுவை கொல்லத் தேடிய ஏரோதுக்கள் ஆகின்றோம்;

### அறியாமை

''நன்மை தீமை, வாழ்வு, சாவு, வறுமை, வளமை ஆகிய அனைத்தும் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன. (சீராக் 10;14) எது வந்தாலும் இதனை எதிர் நோக்கி வாழும் போதே கடவுளின் திருவுளத்தை நாம் நிறைவேற்றுகின்றோம். இல்லையேல் தீயவனின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து இன்பம் தேடத் துடிக்கிறோம்;

துன்பங்களை நாம் ஏற்றுக் கொள்வதில்லை, கஷ்டங்களை பொறுத்துக் கொள்வதில்லை. ஆனால் சுலபமான வழியில் செல்வந்தர்களாகி செல்வச் செருக்கின் நிலையான வாழ்வு வரும் என்று நம்புகின்றோம். நீர்க்குமிழி போன்ற வாழ்வில் நிலையான பேரின்பத்துக்கு இட்டுச் செல்லும் வாழ்வை வெறுத்துத் தள்ளுகின்றோம் இது எமது அறியாமையே. நம் ஆண்டவன் பக்கத்தில் இருக்காமையே ஆகும்.

ஆண்டவன் கொடையாகத் தந்த மானிட வாழ்வை உயரிய நெறிமுறைகளுடன் நாம் வாழ முற்படும் போது ஆண்டவனின் அருளும் துணையும் நிறைவாக எம்மைத்தேடி வரும் எம் உள்ளத்தில் நிம்மதி பிறக்கும். மற்றவர்கள் மேல் மரியாதை உண்டாகும். நன்மை செய்வதிலே ஆர்வம் ஏற்படும். எல்லோரையும் ஏற்கின்ற மனநிலை உருவாகும். இவ்வன்பு நிறை வாழ்வை இறைவன் புத்தாண்டில் எல்லோருக்கும் தர வேண்டும். என்று இறைவரம் வேண்டுவோம்.

---

செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை
வேந்தன் கவிக்கைக்
கீழ்த்தங்கும் உலகு

குறள்

## வலம்புரி

### குடியமர்வில் தீர்க்கமான முடிவுதேவை!

அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 4 ம் சுற்று பேச்சுவார்த்தை நாளை திங்கட்கிழமை தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற போதிலும், பேச்சுவார்த்தையில் இணக்கப் காணப்பட்ட பல விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரமைக்கும் விடயங்கள் இன்னமும் தேக்க நிலையிலேயே உள்ளது.

அடிப்படைப்பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு, அதன் பின்னரே இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற அடிப்படையில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அடிப்படைப் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண்பதில் பிரச்சினை ஏற்படுமாயின், அது நிரந்தர சமாதானத் தீர்வு என்ற இலக்கை அடைவதற்குத் தடையாக அமையும்.

இத்தகையதோர் சூழ்நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடிமமர்த்தும் விடயத்தில் புலிகளும், இராணுவமும் முரண்பட்டுள்ளன. இத்தகைய முரண்பாடு புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்ற இராணுவத்தின் கோரிக்கையோடு மேலும் முறுகலடைந்துள்ளது.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழுவிலிருந்து விஸ்வரூபம் எடுத்துள்ள உயர் பாதுகாப்பு வலய விவகாரத்திற்கு நாளை நடைபெறுகின்ற அரசு- புலிகள் பேச்சில் தீர்க்கமான முடிவு எடடப்பட வேண்டும்.

இல்லையேல் அதி உயர் பாதுகாப்பு வலய விவகாரம் சமாதானத்தைக் குழப்பியடிக்க முனைந்துள்ள தென்னிலங்கை இனவாத சக்திகளுக்கு சாதகமாக அமைந்துவிடும்.

எனவே அதிஉயர் பாதுகாப்பு வலய விடயத்தில் இராணுவத்திற்குமேலாக அரசு ஓர் திடமான முடிவை எடுக்க வேண்டும்.

---

## தெற்கில் திருடப்படும் வாகனங்கள்

(கோட்டை)

தெற்கில் திருடப்படும் வாகனங்களில் பலவும் வடக்கிற்கு கொண்டுசெல்லப்பட்டு விற்கப்படுவதாக கூறப்படுகின்றது;

அண்மையில் கண்டியில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வான்ஒன்று நிக்வெரட்டியாவில் திருடப்பட்டதென்று தெரிய வந்ததாகவும் பின்னர் அதன் சாரதியுடன் வான் முருங்கனுக்கும் மன்னாருக்குமிடையில் பிடிபட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன; (பி-)

---

## வடக்கு-கிழக்குப் பிரதேச சமுர்த்தித் திட்ட விஸ்தரிப்புக்கு ஐந்து கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சமுர்த்தித் திட்டத்தை விஸ்தரிக்க 5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜெயரட்ணதெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகியமாவட்டங்களில் 84 சமுர்த்தி வங்கிகள் இயங்குகின்றன.

இதேவேளை இம்மாவட்டங்களில் இருந்து சமுர்த்திக் குழுக்கள் மூலம் சேமிக்கப்பட்ட 15 கோடி ரூபாவை அரச வங்கிகளில் வைப்புச் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றை தனியார் வங்கிகளில் வைப்புச் செய்தால் பிரமுக வங்கிக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என சமுர்த்தி அபிவிருத்தி விவசாய ஆராய்ச்சி உத்தியோகஸ்தர்கள சங்கம் எச்சரித்துள்ளது. (உ-8)

---

## ப.நோ.கூ. சங்கங்கள் காலத்திற்கேற்ப பணிகளை மாற்றியமைக்க வேண்டும்

### சி.வி.கே. ஆலோசனை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் பாரம்பரிய பொருட்களை வியாபாரம் செய்யும் நிலைப்பாட்டில் இருந்து விலகிக்கொண்டு, காலத்தின் தேவைக்கேற்ப மக்களின் புனர்வாழ்வு புனரமைப்புப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முன்வர வேண்டும.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூ. ச. சமாசத் தலைவரான சி. வி. கே. சிவஞானம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கடன் வழங்கல் திட்டக்கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைச் சேர்ந்த ஜோசப் எழில்ராஜன் பங்குகொண்டு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு கடன்வழங்கும் திட்டம்பற்றிய விளக்கங்களை கூறினார்.

சமாசத்தலைவர் சி. வி. கே; சிவஞானம் அங்குதொடர்ந்து குறிப்பிடும்போது.

கூட்டுறவுத்துறையில்தான் உண்மையான ஜனநாயகம் நிலைக்கின்றது. ஜனநாயகப் பண்புகளை நாம் சரிவரப் பயன்படுத்திவருகின்றோம். அவ்விதம் இருக்க இன்று ஜனநாயகம்பற்றிச் சிலர் புதிய கருத்துக்களைக் கூறிவருவது கவலைக்குரியதுஎன்று குறிப்பிட்டார்.

யாழ். குடாநாட்டிலுள்ள மொத்தம் 40 கூட்டுறவுச்சங்கங்களுக்கும் கடன் திட்டத்தினை அமுல்செய்ய வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளதுடன் ஒவ்வொரு சங்கத்திற்கும் நிதியுதவியுடன், தளபாட, மற்றும் காகிதாதி வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்று தெரிவித்தார். (உ-77)

---

தினசரி தியானம்

### இயற்கையின் நியதி

இயற்கையின் தோன்றுதல்கள் எல்லாம் ஒரு முக்கியமான விதிக்கு உட்பட்டது; அந்த விதிதான் கர்மா எனப்படும்; அதுதான் இவ்வுலகின் அமைதியையும், ஒற்றுமையையும் காத்துவருகிறது. எந்த சிருஷ்டியும் இப்பெரிய விதியினின்றும் தப்பமுடியாது;

உன்னுடைய எந்தக் காரியத்திற்கும் சமவேகத்துடன் கூடிய பலன் உனக்கு உண்டு. பிறருக்கு நீ ஏதாவது நன்மை செய்தால், உண்மையில் உனக்குத்தானே நன்மை செய்து கொள்கின்றாய். ஏனெனில், எல்லாமே ஆத்மாதான்; 'ஆத்மைவ இதம் சர்வம்' என்பது உபநிஷதங்களின் உறுதியான வாக்கு; நீ செய்யும் நல்ல காரியத்திற்கு உனக்குப் பலன் உண்டு;

சுவாமி சிவானந்தர்

### சமாதான...

வில்லை.

நல்லதொரு அரசியல் தீர்விற்கு சிங்கள அரசியல் தலைமைகள் இணங்கிச் செல்லா விட்டால் நாடு பாரிய எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். அரசுக்கும் தமிழீழ விடுத லைப புலிகளுக்குமிடையே தற்பொழுது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு அரசு ஒரு போதும் அனுமதிக்காது. எவ்வாறாயினும் நாட்டில் மீண்டும் போர்ச் சூழல் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை என்று கூறிய பிரதமர், ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை. என்றும் தெரிவித்தார். (ந-5)

## சொகுசு கார்கள்

(புதுடில்லி)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக இந்தியாவில் இருந்து சொகுசு கார்களை இலங்கை அரசு இறக்குமதி செய்யவுள்ளது.

55கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியிலான 225 சொகுசு கார்களே இந்தியாவில் இருந்து இறக்கப்பட்வுள்ளது. (ந,5)

### அரசு-புலிகள்...

பேச்சில் உயர் பாதுகாப்பு வலயம்குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் புலிகளுக்கும், இராணுவத் தரப்பினருக்குமிடையே நிலவும் இழுபறி நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்றும் தெரிவித்த அமைச்சர் மிலிந்த மொறகொட, நாளைய சமாதானப் பேச்சுக்களின் போது அதியுயர் பாதுகாப்பு வலயவிவகா ரத்துடன், வடக்குக் கிழக்கின் புனரமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகள் குறித்தும் ஆரா யப்படும் எனத் தெரிவித்தார். (ந)

### அரசு...

கொழும்பில் இருந்து தாய்லாந்து சென்றுள்ள. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா, பொருளாதார நிபுணர் ஜோய் மகேஸ்வரன் மற்றும் முதற் தடவையாக சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் இடம் பெற்றுள் ளனர். இதே வேளை முஸ்லிம் புத்தி ஜீவிகள் குழு நாளை தாய்லாந்து செல்லும். (த)

### இராணுவ புலனாய்...

உள்ளே சென்று சோதனையிட அனுமதிக்க முடியாது எனவும் அதனையும் மீறி இராணுவம் உள்ளே நுழைந்தால், சயனைட் குடிப்போம் எனவும் அங்கிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் எச்சரித்தனர். இதனால் இராணுவம் அலுவலகத்திற்கு வெளியே நின்றது.

இவ்விடயம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிராந் தியத் தளபதிகள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற் றிற்கு உடனடியாக அறிவிக் கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சமரச முயற்சியை ஏற்படுத்த முயன்றது.3மணிநேரமாக இடம் பெற்ற இழுபறிநிலையைத் தொடர்ந்துஇறுதியில் புலிகளுக்கும இராணுவத்தினருக்குமிடையில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியின், பிரசன்னத்துடன் ஆயுதங்கள் எதுவும் இன்றி அலுவலகத்தைச் சோதனையிட அனுமதிக்கப்பட்டது. சுமார்15 நிமிடங்கள் சோதனையிடம் பெறறது. ஆனால் அங்கு எவரும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தமது அதிருப்தியையும்,கண்டனத்தையும் மட்டக்களப்பு இராணுவ உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளதுடன் இவ்வாறானதொரு நிலை தொடருமாயின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளர். (த-5)


திருமறைக் கலாமன்றம்
CENTRE FOR PERFORMING ARTS
விண்ணப்பங்கள் கோரல்

கவின் கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS

2003 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு பின்வரும் பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

➢ வாய்ப்பாட்டு ➢பரதம் ➢கதகளி ➢ஓர்கன் ➢மிருதங்கம்
➢வயலின் ➢கிற்றார் ➢வீணை ➢புல்லாங்குழல்
➢சித்திரம் ➢நாடகமும் அரங்கியலும்(A/L2005)

இப் பாடநெறிகளுக்கு குறைந்தளவு கட்டணமே அறவிடப்படும்

நாடகப் பயில்கம்
SCHOOL OF DRAMA

எமது மன்றத்தால் வருடாந்தம் இலவசமாக நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2003 ஆம் ஆண்டிற்கான புதிய பிரிவில் பயில் வதற்கு ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியை பெற விரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது.

சிறுவர் கலைக்கூடம்
CHILDREN'S THEATRE

இக் கலைக்கூடத்தில் 2003ம் ஆண்டிற்கான புதிய பிரிவில் சேர்ந்து பயில விரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதிற் கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு ஊடகங்களூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.

பிரிவுI - 5-12 வயது வரை
பிரிவுII - 13-16 வயது வரை

குறிப்பு:
அனைத்துப் பிரிவுகளுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 20.01.2003 ஆகும்
விண்ணப்பப் படிவங்களை நேரடியாக யாழ். மன்ற அலுவல்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்

238, பிரதான வீதி; யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2222393
E-mail: cpajaffna@eureka.lk
Website:WWW.cpateam.org

பொதுச் செயலாளர்
திருமறைக்கலாமன்றம்

(C/5603)



MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப்பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C/5602]



THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH
மற்றும் முக்கிய பாடங்கள்
426 (302), K.K.S ROAD
JAFFNA
(6421)




ராஜா
யாழ்ப்பாணம்
01.01.2003 முதல் குதூகல ஆரம்பம
முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
சுந்தரா ரவல்ஸ்
10.30, 2.30, 6.30
(C/5524)


## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

2003. 01. 05

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 . 08 . 1938 | 5 . 1 . 2000 |



மாமனிதர்

## குமார் பொன்னம்பலம்

(ஜீ.ஜீ. பொன்னம்பலம் யூனியர்)

நீ உனது உயிரைப்பற்றிப் பயப்பட்டால் உனது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். நீ வாயை மூடிக்கொண்டே வாழ வேண்டுமானால், அந்த வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன? நான் சுயமரியாதையுள்ள ஒரு தமிழனாகவே வாழ விரும்புகிறேன். நான் ஒரு அடிமையாக வாழ்ந்து, இனத்துவேசிகளும், ஆட்சியில் உள்ளவர்களும் கூறுபவைகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாவிடில், அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால், நான் ஏன் எனது மனச்சாட்சிக்கு எதிராக நடந்து, மௌனம் சாதிக்க வேண்டும்?

குமார் பொன்னம்பலம்

அன்னார் தன்னிடம் ஆயுதம் ஒன்றும் இல்லை. ஆனால், கடவுள்தான்தனக்குத் துணை என்று கூறிவந்தார்.

அன்னாருக்கு மூன்று ஆயுதங்கள் கடவுளால் கொடுக்கப்பட்டன.

முதலாவது: அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மைந்தன்

இரண்டாவது:அமரர் ஜீஜீ பொன்னம்பலத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அ.இ.தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர்

மூன்றாவது: மேலே கூறிய இரு ஆயுதங்களினாலும் தியாக உணர்ச்சியினாலும் அவருக்கு ஏற்பட்ட தீவிரமான துணிவு.

அன்னாரின் நினைவை என்றும் மறவா
க.மு. தர்மராசா

(6418)


DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்



DSI



பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின் யாழ் குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES சுப்ப சூஸ்
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
[C/5548]
DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.